# பகுதி II


| | பக்கம் |
|---|---|
| மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் | I — Liii |
| ஆளணி | Liii — Lvi |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | i |
| நாணய வெளியீடு | xi |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | xii |
| வங்கி மேற்பார்வை | xiv |
| வங்கியல்லா நிதி நிறுவனங்கள் | xvii |
| அபிவிருத்தி நிதி | xix |
| கிராமியக் கொடுகடன் | xxix |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | xxxii |
| கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | xxxv |
| ஊழியர் சேமநிதியம் | xxxvi |
| செலாவணிக் கட்டுப்பாடு | xxxix |
| பொதுப் படுகடன் | xxxxii |
| பிரதேச அலுவலகங்கள்—மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை | xxxxiv |
| தகவலும் வெளியீடுகளும் | xxxxvi |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | xxxxviii |
| அளவீடுகளும் தரவுச் சேகரிப்புகளும் | xxxxviii |
| தரவு செய்முறைப்படுத்தல் | L |
| பயிற்சி | L |
| முகாமைக் கணக்காய்வு | Li |
| பணிமனை | Li |
| நலம் | Liii |
| ஆளணி | Liii |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்

1992 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 1,012,540 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 5.7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. மத்திய வங்கியின் 1992 திசெம்பர் 31 ஆம் நாளன்று உள்ளவாறான ஐந்தொகையும் 1992 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் இலாப நட்டக் கணக்குகளும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பக்கத்தில், வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகள் 38.4 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் உள்நாட்டுச் சொத்துக்களும் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் முறையே 9.5 சதவீதத்தாலும், 4.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டுச் சொத்தில் அரச, அரச உத்தரவாதப் பிணைகள் 27.0 சதவீதமான மிகக் கூடியளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தன. எனினும் அரசுக்கான கடன்களும் முற்பணங்களும் 16.7 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய கொடுகடன் நிறுவனங்களுக்குமான நடுத்தர நீண்டகால கொடுகடன் வசதிகள் 22.5 சதவீதத்தால் அதிகரித்தன. இதேவேளை வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் முன்னைய ஆண்டைவிட 33.9 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், முன்னைய ஆண்டின் இலாபங்களிலிருந்து மிகைக் கணக்குக்கு ரூ. 1,430 இலட்சம் மாற்றல் செய்யப்பட்டதன் காரணமாக மூலதனக் கணக்குகள் 16.7 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. முக்கிய தனிப் பெரும் விடயமான சுற்றோட்டத்திலுள்ள நாணயம் முன்னைய ஆண்டைவிட 10.8 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. மத்திய வங்கியுடனான வைப்புக்கள் 1.5 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. ஆய்வுக்குரிய ஆண்டில் அரசின் வைப்புக்கள் 70.6 சதவீதத்தினாலும் அரச முகவரின் வைப்புக்கள் 66.5 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. இதேவேளை பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் என்பனவற்றின் வைப்புக்கள் 37 சதவீதத்தால் உயர்வடைந்த வேளையில் வர்த்தக வங்கிகள் 15.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் 23.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. வங்கியின் சொத்துக்கள்/பொறுப்புக்களினது முக்கிய கூறுகளின் ஒப்பீடு அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வருவாய் ரூ. 120,700 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 34.8 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. செலவு, ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கங்கள், பெறுமானத் தேய்விற்கான ஒதுக்குகள் ஏனைய கட்டணங்கள் என்பனவற்றிற்கு இடமளித்தபின் மீதியாக விளங்கிய வங்கியின் தேறிய இலாபமான ரூ. 10,000 இலட்சம் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசின் திரட்டிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் எனக் குறித்தொதுக்கப்பட்டது.

## இலங்கை மத்திய

### 1991 திசெம்பர் 31 இலும்

| 1991 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1992 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **மூலதன கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 842,000,000 | 857,000,000 | மிகை ... | 985,000,000 | 1,000,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 26,411,240,020 | | தாள்கள் ... | 29,270,372,778 | |
| 1,111,353,950 | 27,522,593,970 | குத்திகள் ... | 1,225,882,746 | 30,496,255,524 |
| | | **வைப்புக்கள்** | | |
| 9,016,971,676 | | அரசு ... | 2,654,614,089 | |
| 107,140,735 | | அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் ... | 35,910,658 | |
| 12,426,154,793 | | வர்த்தக வங்கிகள் ... | 14,325,662,158 | |
| 12,994,279,929 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 17,827,214,959 | |
| 346,094 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 22,600,033/– நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதியம் ... | 538,427 | |
| 704,012,736 | 35,248,905,963 | ஏனையவைகள் ... | 921,195,999 | 35,765,136,290 |
| | 4,000,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் ... | | 4,925,000,000 |
| | 507,750,000 | மூலதன உதவுதொகைக் கணக்கு ... | | 537,750,000 |
| | 27,698,765,231 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ... | | 28,529,936,566 |
| | 95,835,015,164 | | | 101,254,078,380 |

### 1992 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற

| 1991 திசெம்பர் 31 | | | 1992 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | 7,658,214,373 | பொதுச் செலவுகளுக்கும்(சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 11,070,337,959 |
| | | 1992 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம் | | |
| 143,000,000 | | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (அ) இன்படி மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | | |
| 1,150,000,000 | 1.293,000,000 | நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ )இன் நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வர வேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 1,000,000,000 | 1,000,000,000 |
| | 8,951,214,373 | | | 12,070 337,959 |

**கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு:**

1992ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் 1949 இன் எண் 58 கொண்ட நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு–7.
1993, ஏப்பிறல் 07

எஸ். எம். சப்றி
கணக்காய்வாளர் நாயகம்

## வங்கியின் ஐந்தொகையின் ஒப்பீடு

### 1992 திசெம்பர் 31 இலும் உள்ளவாறு

| 1991 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1992 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 21,318,200,937 | | வெளிநாட்டில் உள்ள பணங்களும், நிலுவைகளும் | 10,229,341,245 | |
| 7,331,728,788 | | வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் | 29,430 157,174* | |
| 10,003,786 | 28,659,933,511 | சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடைமைகள் ... | 3,222,160 | 39,662,720,579 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 16,117,313,293 | | அரசிற்கு ... | 18,801,831,081 | |
| 3,949,828,378 | | ஏனையவற்றிற்கு–நடுத்தர, நீண்டகால ... | 4,839,548,302** | |
| 1,394,248,551 | | குறுங்கால ... | 923,265,218 | |
| 29,863,952,320 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 21,802,050,273 | |
| 507,750,000 | 51,833,092,542 | நிதி, ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் ... | 537,750,000 | 46,904,444,874 |
| | 15,341,989,111 | ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் ... | | 14,686,912,927 |
| | 95,835,015.164 | | | 101,254,078,380 |

*அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூ. 5,527,675 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூ. 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ. 2,933,697/– ஆகவும், 34,340/– ஆகவும் இருந்தன.)

** ரூ. 1,000 இலட்சம் கொண்ட சிறப்புக் கடனை உள்ளடக்கும்.

### ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1991 திசெம்பர் 31 | | 1992 திசெம்பர் 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 8,951,214,373 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | 12,070,337,959 |
| 8,951,214,373 | | 12,070,337,959 |

எச். பீ. திசநாயக்க
ஆளுநர்

எம். பீ. திசாநாயக்க
முதன்மைக் கணக்காளர்

அட்டவணை 2.2

மத்திய வங்கியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய முக்கிய கூறுகளின் ஒப்பீடு
1991, 1992 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு

| பொறுப்புக்கள் | | | | | சொத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடயம் | 1991 | | 1992 | | விடயம் | 1991 | | 1992 | |
| | ரூ. ப. இ. | % | ரூ. ப. இ. | % | | ரூ ப. இ | % | ரூ. ப. இ. | % |
| மூலதனக் கணக்கு ... | 857.0 | 0.9 | 1,000.0 | 1.0 | பன்னாட்டு ஒதுக்கு ... | 28,659.9 | 29.9 | 39,662.7 | 39.2 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ... | 27,522.6 | 28.7 | 30,496,3 | 30.1 | | | | | |
| வைப்புக்கள் ... | 35,248.9 | 36.8 | 35,765.1 | 35.3 | உள்நாட்டுச் சொத்துக்கள் ... | 51,833.1 | 54.1 | 46,904.5 | 46.3 |
| நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் | 4,000.0 | 4.2 | 4,925.0 | 4.9 | | | | | |
| மூலதன உதவுதொகை க/கு ... | 507.7 | 0.5 | 537.8 | 0.5 | ஏனைய சொத்துக்கள் ... | 15,342.0 | 16.0 | 14,686.9 | 14.5 |
| ஏனைய பொறுப்புக்கள் ... | 27,698.8 | 28.9 | 28,529.9 | 28.2 | | | | | |
| மொத்தம் ... | 95,835.0 | 100.0 | 101,254.1 | 100.0 | மொத்தம் ... | 95,835.0 | 100.0 | 101,254.1 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்**

மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுடன் இலங்கை ரூபாவிற்கு எதிரான ஐக்கிய அமெரிக்க டொலரின் உடன் வாங்கும் விற்கும் வீதங்களைத் தீர்மானிப்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. 1992 மாச்சிலிருந்து வங்கி உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் தொழிற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன் பரந்தளவு எல்லையைக் கொண்ட வாங்கும் விற்கும் வீதங்களுக்கு விலை குறிப்பிடத் தொடங்கியது.

கடந்த காலங்களைப் போன்றே மத்திய வங்கி தொடர்ந்தும் அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் பன்னாட்டு பண, மூலதனச் சந்தையில் முதலீடு செய்தது.

**தங்க விற்பனை**

ஆய்விற்குரிய காலத்தில் வர்த்தக மற்றும் செலாவணிக் கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டதனைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்குள் தங்க விற்பனைத் தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, மத்திய வங்கியினால் விமான நிலையத்தில் அமைக்கப்பட்ட இரண்டு விற்பனை நிலையங்களின் தொழிற்பாட்டையும் நிறுத்துவதற்கு வழி முறைகள் எடுக்கப்பட்டன. வெளிச் செல்லும் கூடத்தின் தங்க விற்பனை நிலையம் 1992 செத்தெம்பர் 29 ஆம் நாளிலிருந்து மூடப்பட்ட வேளையில் வருகைதரும் பிரதேசத்திலுள்ள நிலையம் 1992 நவெம்பர் 5 ஆம் நாளிலிருந்து மூடப்பட்டது. எனினும், மத்திய வங்கி தனது தலைமை அலுவலகக் கட்டடத்தில் தங்க விற்பனையை வழமைபோல் தொடர்ந்தும் நடாத்தியது.

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

1992 இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் வசதிகளினூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் பெறுமதியான ரூ. 239,060 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 218,060 இலட்சமாக விளங்கியது. 1992 இல் வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாய்ப் பெறுமதி 1991 இன் ரூ. 87,560 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 74,030 இலட்சமாக விளங்கியது. கொடுக்கல் வாங்கல்களின் மட்டம், மற்றும் தேறிய தீர்ப்பனவு என்பனவற்றிலான இக் குறைப்பு, முக்கியமாக ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய தீர்ப்பனவு முறைக்கு வெளியே இந்தியாவிலிருந்தான இறக்குமதிகளுக்கு எதிராக இறக்குமதியாளர்கள் கொடுப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டதாகும். 1992 இல் இந்தியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கப்பட்ட செலாவணி வீத முகாமைத்துவ முறையின்கீழ் இலங்கையில் இறக்குமதியாளர்கள் அனுபவித்த இடர்ப்பாடுகளை ஒழிக்கும் பொருட்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆய்வுக்குரிய காலப் பகுதியில் பண்டமாற்று வசதிகளின் கீழ் இலங்கையின் பங்களிப்பு ரூ. 7,520 இலட்சமாக இருந்தது.

**வங்கி வீதம்**

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87 இன் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) ஆண்டொன்றுக்கு 17 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

**குறுங்காலக் கொடுகடன்**

ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான வசதிகளை மத்திய வங்கி தொடர்ந்தும் வழங்கியது. 1992 மாச்சு 31 ஆம் நாளிலிருந்து திட்டத்தின் வகை 1, 11 இற்குப் பொருந்தத்தக்க வரையறைகள் 1 சதவீதப் புள்ளியினால் குறைக்கப்பட்டு முறையே ஆண்டிற்கு 2.0 சதவீதமாகவும், ஆண்டிற்கு 2.8 சதவீதமாகவும் விளங்கின. இதேவேளை 1992 திசெம்பர் 15 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் வகை 1, 11 இன் கீழான மீள்நிதியிடல் வீதங்கள் முறையே ஆண்டொன்றுக்கு 18 சதவீதத்திற்கும் ஆண்டொன்றுக்கு 15 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன. இதேவேளை மேற்கூறப்பட்ட வகைகள் ஒவ்வொன்றின் கீழும் வர்த்தக வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட எல்லை ஆண்டொன்றுக்கு 1.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. திருத்தப்பட்ட வீதமும் முன்னையவீதமும் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3

**ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டம் (ஏகொமீதி) வட்டி வீதங்கள்**

(ஆண்டிற்கான சதவீதம்)

| | வட்டி வீதம் | | வர்த்தக வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட வரையறை | |
|---|---|---|---|---|
| | திருத்தப்பட முன்பு | திருத்தப் பட்ட பின்பு | திருத்தப்பட முன்பு | திருத்தப் பட்ட பின்பு |
| வகை 1 | 17 | 18 | 2.0 | 1.5 |
| வகை 11 | 12 | 15 | 2.8 | 1.5 |

ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளுக்குப் பொருந்தத்தக்க உள்ளடக்கம், மீள்நிதியிடல் வீதங்கள், எல்லைகள் என்பன தொடர்பான மாற்றங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. 1992 சனவரி 16 ஆம் நாளிலிருந்து சிலிர்ப்புத் தும்பு, கறுவாப்பட்டை என்பன வகை 1 இலிருந்து வகை 11 இற்கு மாற்றப்பட்டன. 1992 பெப்புருவரி 3 ஆம் நாளிலிருந்து வகை 1 இன் கீழ் உள்ள எஞ்சிய விடயங்களுக்கான மீள்நிதியிடலின் அளவு ஏற்றுமதிக் கட்டளையின் க.ஏ.பெ. இல் அல்லது நாணயக் கடிதத்தின் பெறுமதியில் ஆகக்கூடியது 60 சதவீதத்திற்குத் திருத்தப்பட்டது. எனினும் இது வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட கடன் தொகையினை விஞ்சக் கூடாது.

திருத்தியமைக்கப்படு முன் இவ்வகையின் கீழ் மீள்நிதியிடப்பட்ட அளவு வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட தொடர்பான பொதியிடல் கொடுகடனில் 50 சத வீதமளவினதாக இருந்தது. 1992 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து வகை 1 இன் கீழ் வங்கிகளுக்குப் பொருந்தத்தக்க தனிப்பட்ட எல்லைகள் கீழ்நோக்கித் திருத்தப் பட்டுத் திரண்ட எல்லை ரூ. 4,900 இலட்சத்திலிருந்து ரூ. 1,500 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தது. இதே நேரத்தில், வகை 11 இன் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு விடயத்திற்காக ஒவ்வொரு தனிப்பட்ட ஏற்றுமதியாளருக்கும் விதிக்கப் பட்ட ரூ. 100 இலட்சம் கொண்ட ஆகக்கூடிய உச்ச எல்லை, ரூ. 2,000 இலட்சம் கொண்ட மொத்த எல்லைக்கு உட்பட்டு வர்த்தக வங்கிகளுக்குத் தனிப்பட்ட ஒதுக்குகளினால் பதிலிடப்பட்டது.

உத்தரவாத விலைத் திட்டம் மற்றும் கீழ்மட்ட விலைத்திட்டம் என்பன வற்றின் கீழ்ப் பண்டங்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைப்பதற் காக வழங்கப்பட்ட முற்பணங்களின்மீது மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வட்டி வீதமும் 1992 திசெம்பர் 15 ஆம் நாளிலிருந்து ஆண்டொன்றிற்கு 9 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 11 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு நெல் மற்றும் ஏனைய பயிர் களின் கொள்வனவு/களஞ்சியப்படுத்தலுக்காக அவர்களது தனிப்பட்ட வாடிக்கை யாளர்கள் அல்லது வேளாண்மை அமைப்புக்களுக்கு முற்பணம் வழங்குவது தொடர் பாக 1992 மாச்சு 12 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் ஒரு புதிய திட்ட மொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் கடன்கள் ஆகக்கூடியது 6 மாதங்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன. இத் திட்டத்தின் தொடக்கத்தில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மீள் நிதியிடல் வீதமும், அதன் இலாப எல்லையும் 9 சதவீதமாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 1992 திசெம்பர் 15 ஆம் நாளிலிருந்து மீள் நிதியிடல் வீதம் 11 சதவீதத்துக்கு மேல்நோக்கித் திருத்தப்பட்ட வேளையில் இலாப எல்லை மாற்றமின்றிக் காணப் பட்டது.

உற்பத்தியைப் பேணுவதற்கும் சிறு உடைமையாளர்களினால் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட தேயிலைக் கொழுந்துக்காகச் செலுத்தப் படாதிருக்கும் நிலுவைகளைச் செலுத்துவதற்கும் உற்பத்தியைப் பேணுவதற்கும் தேயிலைத் தொழிற்சாலை உடைமையாளர்களுக்கிடையில் அவற்றினைப் பகிர்ந் தளிப்பதற்குமாக ஏழு தேயிலைத் தரகு நிறுவனங்களுக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட முற்பணங்களுக்கும் மத்திய வங்கி 1992 ஏப்பிறல் 7 ஆம் நாளி லிருந்து சிறப்பு மீள்நிதியிடல் வசதியொன்றினை அறிமுகம் செய்தது. இத் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வட்டி வீதமும் இலாப எல்லையும் முறையே ஆண்டொன்றுக்கு 17 சத வீதமாகவும் ஆண்டொன்றுக்கு 3 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டன. மீள்நிதி யிடலுக்கான தொடக்க காலப் பகுதி 6 மாதங்களாக இருப்பதுடன், மொத் தம் 18 மாத காலப் பகுதி வரை ஒரு தடவையில் 6 மாதங்களை விஞ்சாத மேலதிக காலப் பகுதிக்கு நீடிக்கப்படலாம். 1992 இன் இறுதியில் இத் திட்டத் தின்கீழ் வெளிநிற்கும் மீள் நிதியிடல் கடனின் தொகை ரூ. 2,580 இலட்சமாகும்.

**நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்**

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் ரூ. 9,250 இலட்சத்தால் அதிகரிக்கப்பட்டு 1992 இன் இறுதியில் ரூ. 49,250 இலட்சமாக விளங்கியது.

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் அனைத்து வகைகளின் மீதான வட்டி வீதங்கள் ஒவ்வொன்றும் 1992 திசெம்பர் 15 ஆம் நாளன்று 2 சத வீதப் புள்ளிகளால் உயர்த்தப்பட்டது. இதே நேரத்தில் இத் திட்டத்தின் வகை 1 இற்குப் பொருந்தத்தக்க இலாப எல்லை 2 சதவீதப் புள்ளிகளாலும் ஏனைய வகைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டவை ஒவ்வொன்றும் 1 சதவீதப் புள்ளியாலும் குறைக்கப்பட்டன. நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின் கீழ் கொடு கடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட வட்டி வீதங்களும் இலாப எல்லையும் பின்வரும் அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 2.4

**நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின்கீழ் மீள் நிதியிடலுக்காக அனுமதி அளிக்கப்பட்ட வட்டி வீதமும் இலாபமும்**

(ஆண்டிற்கான சதவீதம்)

| | வட்டி வீதம் | | கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள இலாபம் |
|---|---|---|---|
| | செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத்துக்குக் குறைவானது | செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத்துக்குக் கூடியது | |
| வகை I | 13 | 13 | 5 |
| வகை II | 11 | 12 | 3 |
| வகை III | 14 | 14 | 3 |
| வகை IV | 16 | 16 | 3 |

**நிதிக் கூட்டு நிலையங்களுக்கான கடன்கள்**

1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவுகள் 20 (4) (அ), 21 (1) பிரிவுகளின் நியதிகளின்படி மத்திய வங்கி தொடர்ந்தும் நிதிக் கூட்டு நிலையங்களுக்கு நிதியியல் கடன்களை வழங்கியது. இத் திட்டத்தின் கீழ் 1992 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 9,480 இலட்சமாக விளங்கியதுடன் 1992 இன் இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 18,110 இலட்சமாக விளங்கியது.

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

(அ) கொடுகடன் வரம்பு

1989 யூன் 15 இலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட கொடுகடன் உச்ச எல்லையை 1992 ஓகத்து 3 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கி புறக்கீடு செய்தது.

## (ஆ) நாணயக் கடிதங்கள் மீதான வரையறைத் தேவைப்பாடுகள்

அத்தியாவசியமற்றவைகள் எனக் கருதப்படும் பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கு எதிராக 1989 யூன் 15 இலிருந்து நடைமுறைக்கு வந்த 100 சதவீத காசு வரையறைத் தேவைப்பாடுகள் 1992 ஒகத்து 13 இலிருந்து புறக்கீடு செய்யப்பட்டன.

### ஒதுக்குத் தேவைகள்

வர்த்தக வங்கிகளின் கேள்வி, தவணை, சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களுக்கு எதிரான நியதிச் சட்ட ஒதுக்கு விகிதத் தேவைப்பாடு 1992 சனவரி 24 ஆம் நாளிலிருந்து 13 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த விகிதம் 13 சதவீதத்துக்குக் குறைக்கப்பட்டதுடன் வெளிநாட்டு நாணயங்கள் மீதான வைப்புப் பொறுப்புக்களும் 1992 செத்தெம்பர் 4 இலிருந்து இத்தேவைப்பாடுகளின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

### திறைசேரி உண்டியல்களின் இரண்டாந் தரச் சந்தைத் தொழிற்பாடுகள்

இரண்டாந் தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் மொத்த விற்பனைப் புரழ்வு 1991 இன் ரூ. 782,540 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 1,207,980 இலட்சத்துக்கு அதிகரித்தது. ஆய்வுக்குரிய ஆண்டின் கொள்வனவுப் புரழ்வும் ரூ. 374,860 இலட்சத்திலிருந்து ரூ. 509,070 இலட்சத்துக்கு அதிகரித்தது. வங்கியல்லாத் துறைக்கான தேறிய விற்பனைப் புரழ்வு 1991 இன் ரூ. 96,580 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 207,680 இலட்சத்துக்கு அதிகரித்தது.

திறைசேரி உண்டியல்களின் இரண்டாந் தரச் சந்தைத் தொழிற்பாடுகளுக்கு பொருந்தக்கூடிய கழிவு வீதங்கள் இவ்வாண்டில் ஆண்டிற்கு 14.50 சதவீதத்திற்கும் ஆண்டிற்கு 17.05 சதவீதத்துக்கும் இடையில் வேறுபட்டன.

### இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவுதொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்

1964 இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் அடங்கும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதல் தொடர்பான திட்டங்களை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது.

### ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி

ஏற்றுமதியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட கோரல்களை மீளளிப்பதனை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. 1991 இன் ரூ. 5,560 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் ரூ. 6,380 இலட்சம் கொண்ட மொத்தத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டது.

**கட்டாய சேமிப்புக்கள் நிதியம்**

மத்திய வங்கி 1971 இன் எண் 6 கொண்ட கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருமான உச்ச வரம்பு, கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாது காவலனாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன், அரசின் சார்பில் கட்டாய சேமிப் புக்கள் நிதியத்தினையும் நிருவகித்தது. இவ்வாண்டில் 34 உதவுநர்களினால் செய்யப்பட்ட விண்ணப்பங்களின்மீது வங்கி ரூ. 47,433 இனை (வட்டி உட்பட) செலுத்தியது.

**அரச கணக்குகள்**

அரசின் வங்கியாளர் என்ற வகையில் மத்திய வங்கி, அரச திணைக்களங்கள், அரச முகவர் நிலையங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் குறிப்பிடப்பட்ட சில நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குசளைத் தொடர்ந்தும் பேணியது. 1992 திசெம்பர் இறுதியில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 182 ஆகும்.

**வெளிநாட்டு நிதி**

மத்திய வங்கி பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கடன்கள், கொடைகள் என்பன வற்றின் கீழ்க் கிடைக்கத்தக்கதாக இருந்த பகிர்ந்தளிப்புக்களைத் தொடர்ந்தும் பெற்ற வேளையில் அரசின் சார்பில் வெளிநாட்டுக் கடன்களின் மீள் கொடுப் பனவுகளையும் மேற்கொண்டது.

**நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவு**

மத்திய வங்கியினதும் திறைசேரி அலுவலர்களினதும் பிரதிநிதிகளை உள் ளடக்கிய வங்கித் தொழில் திணைக்களத்தில் நிறுவப்பட்ட நாணயத் தொழிற் பாட்டுப் பிரிவு மத்திய வங்கியின் ஒதுக்குப் பணத்தின் நிலைமையினைத் தொடர்ந் தும் கண்காணித்தது. ஆய்வுக்குரிய ஆண்டில் திறைசேரி உண்டியல் எதிர்வுகூறல் குழுவின் தொழிற்பாடுகளும் நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவுக்கு ஒப்படைக்கப் பட்டன.

**இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம்**

இலங்கை தன்னியக்கத் தீர்வகம் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுக்கு, வங்கிகளுக்கிடையேயான காசோலைத் தீர்ப்பனவு வசதிப் பணியினைத் தொடர்ந் தும் வழங்கியது. 1992 இல் இலங்கைத் தன்னியக்க தீர்வகத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் நாளாந்த சராசரி எண்ணிக்கை 17 சதவீதத்தால் 90,000 இற்கு அதிகரித்தது. 1992 இல் தொழிற்பட்ட தீர்ப்பனவுப் பட்டியலின் படி, மொத்தம் 684 வர்த்தக வங்கி/கிளைகளில் 220 வங்கி/கிளைகள் ஒரு நாள் தீர்ப்பனவு ஒழுங்கின்கீழ் கொண்டு வரப்பட்டன. எஞ்சியவையில் 54; 211; 120 வங்கி/கிளைகள் முறையே 2 நாள், 3 நாள், 5 நாள் தீர்ப்பனவு பட்டியலின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. வடக்கு, கிழக்கில் நிலவும் குழப்பநிலைமைகள் காரணமாக மொத்தம் 69 வங்கி/கிளைகள் 7 நாட்கள் கொண்ட தீர்ப்பனவுப் பட்டியலின் கீழ்த் தொடர்ந்து இருந்தன. தன்னியக்க காசோலைத் தீர்ப்பனவு வசதியி

னைச் சிறந்த வகையில் பயன்படுத்துவதற்குப் பங்குபற்றும் வங்கிகளைத் தூண்டும் பொருட்டுச் சம்பந்தப்பட்ட வர்த்தக வங்கிகள் மீது வாசிக்கும்/பகுக்கும் பொறிகளால் நிராகரிக்கப்பட்ட விடயங்களின் செலவினை விதிப்பதற்கு ஓர் செயல்முறை 1992 யூனில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## நாணய வெளியீடு

நாணய வழங்கலின் ஏக அதிகாரத்தைக் கொண்ட வங்கி, 1992 இல் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் பயன்பாட்டிற்காக இலங்கையின் சட்ட ரீதியான கொடுப்பனவுக்கான நாணய வழங்கல் பணியினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1992 இறுதியில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அளவு ரூ. 304,960 இலட்சமாக விளங்கியது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்கள், சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் 96 சதவீதத்தைக் கொண்டிருந்தன.

1991 இல் அறிமுகம் செய்யப்பட்ட இலங்கையின் வளமார்ந்த மரபுவழியைக் காட்டும் தொடரில் புதிய வடிவமைப்புக்களைக் கொண்ட ரூ. 50, ரூ. 20, ரூ. 10 இனங்களிலான நாணயத் தாள்களை வங்கி 1992 இல் வெளியிட்டது.

1992 சனவரி 2 இல் மேன்மை தங்கிய சனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அவர்கள் பதவியில் அமர்ந்த மூன்றாவது ஆண்டு நிறைவினை நினைவு கூருமுகமாக நாணயக் குத்தி ஒன்று வெளியிடப்பட்டது. இக் குறிப்பிடப்பட்ட நாணயக் குத்தி வெள்ளியில் வார்க்கப்பட்ட ரூ. 1 இனத்தைக் கொண்டிருந்தது. பொதுச் சுற்றோட்டத்திற்காகச் செம்பு நிக்கல் கலவையிலும் இந்நாணயக் குத்தி வார்க்கப் பட்டிருந்தது. மேன்மை தங்கிய சனாதிபதிக்கு நாணயக் குத்தியை வைபவ ரீதியாகக் கையளித்தல் கண்டி தலதா மாளிகையின் மகமளுவவில் நடைபெற்றது. கண்டி தலதா மாளிகையில் பொது மக்களுக்கு நாணயக் குத்தியை வழங்குவதற்கும் சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ரூ. 500 இனத்தில் வெள்ளியில் வார்க்கப்பட்ட நாணயக் குத்தியை வெளியிடுவதன் மூலம் அனுபுது மிகிந்து ஜயந்தியின் 2300 ஆம் ஆண்டை நினைவு கூருவதற்கு வங்கி ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இந் நாணயக் குத்தியைப் பொசன் பண்டிகையின்போது 1993 யூனில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1991 இல் வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட ''தூய நாணயத்தாள்'' தொழிற்பாடு வர்த்தக வங்கிகளின் உதவியுடன் 1992 இலும் தொடர்ந்தது.

வங்கியின் இடம் பெயர் நாணயக் கண்காட்சி 1992 இல் ஆரம்பிக்கப்பட்டது. பார்வையாளர்களுக்குச் சிறப்பாகப் பாடசாலைச் சிறுவர்களுக்குக் கல்வி அறிவினைப் புகட்டும் விதத்தில் உலகிலுள்ள அநேகமாக எல்லா நாடுகளினதும் மாதிரி நாணயத் தாள்கள், போலி நாணயத் தாள்கள், குறைபாட்டுடன் அச்சிடப்பட்ட இலங்கை நாணயத் தாள்கள் என்பன இடம்பெயர் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டன. இடம்பெயர் கண்காட்சி நாட்டின் அநுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை, கண்டி, பதுளை, மொனறாகலை, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலுள்ள கிராமப் பகுதிகளில் காண்பிக்கப்பட்டது. காசு மற்றும் கரும பீடங்களை அமைத்ததன் மூலமும் இடம்பெயர் நாணயக் கண்காட்சியைக் காண்பித்ததன் மூலமும் முதற்தடவையாக வங்கி 1992 யூனில் புத்தளையில் நடைபெற்ற 14 ஆவது கிராம எழுச்சிக் கண்காட்சியில் பங்கு பற்றியது.

வங்கியில் ''சிவிசிஎஸ் முறைகள்'' என அழைக்கப்படும் நாணயத்தாள்கள் சரிபார்க்கும், எண்ணும், பிரித்தெடுக்கும் முறைகள் இரண்டினை நிறுவியதன் மூலம் தனது நாணயத்தாள் செயல்முறைப்படுத்தும் முறையை வங்கி தன்னியக்கப் படுத்தியது. இம்முறைகள் 1992 பெப்புருவரியில் ஆரம்பிக்கப்பட்டு 1992 யூனில் உத்தியோகபூர்வமாக ஏற்கப்பட்டது. இம்முறைகள் நாணயத்தாள் செய்முறைப் படுத்தும் தொழிற்பாடுகள் அனைத்தையும் மிகுந்த வேகத்தில் குறைவான தொழிற்படுத்துநருடன் கையாளத்தக்க இயல்பினைக் கொண்டிருந்தன.

## வங்கித்தொழில் அபிவிருத்தி

### நிறுவன வலையமைப்பு

1992 இல் நாட்டின் வங்கித் தொழில் வலையமைப்பு தொடர்ந்து விரிவடைந்தது. பெப்புருவரியில் அம்பாறையில் திறந்து வைக்கப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியும் (பி.கி.அ.வ.), பப்ளிக் பர்ஹாட் வங்கி மலேசியாவின் கிளையொன்றும் மாச்சில் தொழிற்பாட்டைத் தொடங்கின. அம்பாறைப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி திறந்து வைக்கப்பட்டமை கிழக்கு மாகாணத்தில் பி.கி.அ. வங்கி வலையமைப்பின் விரிவாக்கத்தின் தொடக்கத்தினைக் குறித்துக் காட்டுவதாக அமைந்தது. 1992 இறுதியில் பி.கி.அ. வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 16 ஆக அமைந்தது. பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிநாட்டு வங்கிக் கிளையொன்று திறந்து வைக்கப்பட்டமையைக் குறித்துக் காட்டியமையால் பப்ளிக் பர்ஹாட் வங்கியின் கிளையொன்று திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமொன்றாகும்.

இவ்வாண்டுக் காலப் பகுதியில் இடம் பெற்ற இன்னுமொரு முக்கிய நிகழ்ச்சி என்னவெனில் வரையறுக்கப்பட்ட பேங்க் ஒப் கொமர்ஸ் அன்ட் கிரடிட் இன்டர்நெசனல் வங்கியின் (பி.சி.சி.ஐ.) மூன்று கிளைகளின் உள்நாட்டு வங்கித் தொழில் வாணிபம் வரையறுக்கப்பட்ட செலா.ன் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டமையாகும். சம்பந்தப்பட்ட மேலாண்மையாளர்களினால் பி.சி.சி.ஐ. வங்கியின் நடவடிக்கைகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. இதன்படி, 1992 இல் உள்நாட்டில் தொழிற்படும் வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 17 ஆக மாறாது காணப்பட்டது. அபிவிருத்தி வங்கித்தொழில் நிறுவனங்களையும் உள்ளடக்கிய வங்கித் தொழில் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 1991 இன் 42 இலிருந்து 1992 இல் 43 இற்கு அதிகரித்தது.

1992 காலப் பகுதியில் பி.கி.அ. வங்கிகள், உள்நாட்டு தனியார் வர்த்தக வங்கிகள், வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் என்பன தமது கிளை வலையமைப்பினை விரிவாக்கின. முன்னைய ஆண்டைப் போலவே இரு அரச வர்த்தக வங்கிகளான இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் தமது வலையமைப்பு விரிவாக்கத்தில் சார்பு ரீதியில் மிக மெதுவான முன்னேற்றத்தையே காட்டின. இலங்கை வங்கி ஒரேயொரு கிளையினை (கொக்கல) மட்டுமே திறந்ததுடன் வேளாண்மைப் பணிகள் நிலையக் கிளையொன்றினை (வெள்ளவாய) முழுநிலைக் கிளையாக தரமுயர்த்தியது. இதன்படி அதனது முதன்மைக் கிளைகளின் எண்ணிக்கையை 252 இற்கு அதிகரித்ததோடு வேளாண்மைப் பணிகள் நிலையக் கிளைகளின் எண்ணிக்கையை 1991 இன் 36 இலிருந்து 1992 இல் 35 இற்குக் குறைத்துக் கொண்டது. இலங்கை வங்கியினால் நான்கு விரிவாக்க அலுவலகங்களும் திறந்து வைக்கப்பட்டன. இதேவேளையில் இலங்கை வங்கியின் கச்சேரிக்

கிளைகளின் எண்ணிக்கை 24 ஆக மாறாது காணப்பட்டது. மக்கள் வங்கி கொழும்பில் இரண்டு கிளைகளையும், கெஸ்பேவ, கொட்டாவ, கொக்கல என்னும் இடங்களில் ஒவ்வொரு கிளைகளுமாக 5 கிளைகளையும் திறந்ததுடன் அதனது கிளைகளின் மொத்த எண்ணிக்கை 313 இற்கு அதிகரித்தது.

1992 இல் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி 7 கிளைகளைத் திறந்து அதனது கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 28 இற்கு அதிகரித்தது. ஆண்டின் தொடக்கத்தில் 41 கிளைகளைக் கொண்டிருந்த வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி மேலும் 6 கிளைசளைத் திறந்தது. 15 கிளைகளைத் திறந்ததன் மூலம் வரையறுக்கப்பட்ட செலான் வங்கி அதனது கிளை வலையமைப்பில் விரைந்த விரிவாக்கத்தைப் பதிவு செய்தது. ஆய்வுக்குரிய ஆண்டின் இறுதியில், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி அதனிடம் உரித்தளிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பி.சி.சி.ஐ. வங்கியின் 3 கிளைகளையும் உள்ளடக்கி 44 முழு நிலைக் கிளைகளைக் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டில் கிளைகள் எதனையும் திறக்காத வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி 1992 இல் 3 கிளைகளைத் திறந்ததன் மூலம் அதனது கிளை வலையமைப்பை 16 இற்கு அதிகரித்துக் கொண்டது.

இவ்வாண்டில் வெளிநாட்டு வர்த்தக வங்கிகளும் தமது கிளை வலையமைப்பின் விரிவாக்கத்தினைத் தொடர்ந்து மேற்கொண்டன. கொங்கொங் அன்ட் சங்காய் வங்கி 3 கிளைகளைத் திறந்த வேளையில் ஸ்டாண்டட் சார்ட்டட் வங்கி 2 கிளைகளைத் திறந்தது. ஏஎன்இசட் கிரின்லேஸ் வங்கியும் இவ்வாண்டில் கிளையொன்றைத் திறந்தது. ஆண்டின் தொடக்கத்தில் வரையறுக்கப்பட்ட பி.சி.சி.ஐ. வங்கியின் 3 கிளைகளின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட வேளையில் பப்ளிக் பர்ஹாட் வங்கி கொழும்பில் கிளையொன்றைத் திறந்தது. இதன் விளைவாக வெளிநாட்டு வங்கிகளினது கிளைகளின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டின் இறுதியின் 25 இலிருந்து 1992 இல் 29 இற்கு அதிகரித்தது.

இவ்வாண்டில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் அவற்றின் கிளையமைப்பில் விரிவாக்கத்தினைப் பதிவு செய்தன. மாத்தறைப் பி.கி.அ. வங்கி வல்கம, தெனியாய, திகொட, கம்புறுப்பிட்டிய ஆகிய இடங்களில் 4 கிளைகளைத் திறந்தது. காலி கி.அ. வங்கி காலி, ஊருகஸ்மன்கந்திய, யக்கலமுல்ல ஆகிய இடங்களில் 3 கிளைகளைத் திறந்தது. பதுளை பி.கி.அ. வங்கியும் ஊவா—பரநகம, பண்டாரவளை, ரிதிமாலியத்த ஆகிய இடங்களில் 3 கிளைகளைத் திறந்தது. களுத்துறை, குருநாகல், மகநுவர (கண்டி), நுவரெலியா, பொலன்னறுவை, இரத்தினபுரி பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒவ்வொன்றும் 2 கிளைகளைத் திறந்தன. இவை முறையே மதுரலிய, களுத்துறை வடக்கு, நாரம்மல, பொலிபிதிகம, மெனிக்கின்ன, தவுலகல, அங்குரன்கெத்த, கொட்டகல, பக்கமூன, மன்னம்பிட்டி, எகலியசொடை, கொலன்ன ஆகிய இடங்களிலாகும். அநுராதபுரம் அம்பாந்தோட்டை, கேகாலை, புத்தளம், மாத்தளை ஆகிய பி.கி.அ. வங்கிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிளைகளைத் திறந்தன. இவை முறையே கொனபதிராவ, வீரகெட்டிய, கெம்மாதகம, மகவேவ, நாவுல ஆகிய இடங்களிலாகும். 1992 இல் நிறுவப்பட்ட அம்பாறை பி.கி.அ. வங்கி அம்பாறை, தெகிஅத்த கண்டிய, சம்மாந்துறை, தமன, அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் கிளைகளைத் திறந்தது. இதன் விளைவாக பி.கி.அ. வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1991 இன் 124 இலிருந்து 1992 இல் 156 இற்கு அதிகரித்தது.

தேசிய சேமிப்பு வங்கி 1992 இல் 3 கிளைகளைத் திறந்ததன் மூலம் அதனது கிளை வலையமைப்பை 84 இற்கு அதிகரித்தது. தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், அரச ஈட்டு முதலீட்டு வங்கி போன்ற அபிவிருத்தி வங்கித்தொழில் நிறுவனங்களின் அலுவலக வலையமைப்பு இவ்வாண்டில் மாறாது காணப்பட்டது.

வரையறுக்கப்பட்ட செலான் வங்கி அதனது துணை நிறுவனம் ஒன்றாக வரையறுக்கப்பட்ட செலான் வணிக வங்கியினை நிறுவி வணிக வங்கிகளின் எண்ணிக்கையை ஒன்றினால் நான்கிற்கு அதிகரித்தது.

### இடம்பெயர் வங்கித்தொழில் பணிகள்

வங்கித் தொழில் குறைவான அல்லது வங்கித் தொழிலே இல்லாத தொலை தூர பிரதேசங்களில் வங்கித்தொழில் தேவைகளை வழங்குவதற்காக 1992 இல் பி.கி.அ. வங்கிகளும் சில வர்த்தக வங்கிகளும் தொடர்ந்தும் இடம்பெயர் வங்கித் தொழில் பணிகளை மேற்கொண்டன. வரையறுக்கப்பட்ட செலான் வங்கி கம்பகா மாவட்டத்தில் வெலிவேரிய என்ற இடத்திலும் பொலநறுவை மாவட்டத்தில் மன்னம்பிட்டி என்ற இடத்திலும் நுவரெலியா மாவட்டத்தில் பொகவந்தலாவ, கொட்டகல என்ற இடங்களிலும் இடம்பெயர் வங்கித்தொழில் நிலையங்களைத் தொடங்கியது. வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியும் கொழும்பு மாவட்டத்தில் சிறி ஜயவர்த்தனபுர வைத்தியசாலையிலும், தலங்க என்னும் இடத்தில் அமைந்துள்ள பன்னாட்டு நீர்ப்பாய்ச்சல் முகாமைத்துவ நிறுவனத்தின் கட்டடத்திலும் நுவரெலியா மாவட்டத்தில் பொகவந்தலாவ என்னுமிடத்திலும் இடம்பெயர் வங்கித்தொழில் பணிகளை வழங்கத் தொடங்கியது.

### தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை நிறுவுதல்

வங்கிக் கிளை வலையமைப்பின் விரைந்த விரிவாக்கத்துக்கு மாறாக, 1992 ஆம் ஆண்டானது இடங்களுக்கு வெளியேயான தன்னியக்கக் கூற்றுப்பொறிகள் நிறுவப்படுவதில் மெதுவான முன்னேற்றத்தையே கண்டது. இவ்வாண்டில், வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியினால் கல்கிசை நவீன சந்தையில் தன்னியக்கப் பொறியொன்றின் நிறுவுதல் மட்டுமே இடம்பெற்றது.

### வங்கி மேற்பார்வை

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வர்த்தக வங்கிகளின் ஒழுங்கு விதிகளுக்கும் மேற்பார்வைக்கும் பொறுப்பாக இருந்தது. 1992 பெப்புருவரியில் நாணய விதிச் சட்டத்திலான திருத்தங்கள் வர்த்தக வங்கி தவிர்ந்த எந்த வங்கித் தொழில் நிறுவனத்தையும் உள்ளடக்குவதற்காகத் திணைக்களத்தின் மேற்பார்வைத் தொழிற்பாட்டை விரிவாக்கியதுடன் அவ்வாறான நிறுவனங்கள் பாதுகாப்பற்றதும் தவறானதுமான நடைமுறைகளைத் தொடர்ந்து செய்வதை நிறுத்துவதற்கும் தவிர்ப்பதற்கும் பணிப்புரைகளை வழங்குதல், மற்றும் எந்த வியாபாரமும் என்ன முறையில் எந்த விதத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமெனப் பணிப்புரைகள் வழங்குதல் என்பனவற்றிற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளித்தது. திருத்தப்பட்ட ஏற்பாடுகளில் ''வங்கித் தொழில் நிறுவனம்'' என்ற பதம் நாணயச் சபையின் நோக்கில் வணிக வங்கித் தொழிலில் வியாபாரம் செய்யும் எந்த நிறுவனத்தையும் உள்ளடக்கும் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது.

தல மேற்பார்வை மற்றும் தலத்துக்கு வெளியேயான கவனமான கண் காணிப்பு மூலமும் திணைக்களம் அதன் பொறுப்புக்களை மேற்கொண்டது. வங்கிப் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்காகத் திணைக்களத்திற்குக் கொடுக்கப் பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 1992 இல் 9 வர்த்தக வங்கிகளினதும் ஒரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினதும் (பி.கி.அ.வ.) பரீட்சிப்புக்களைத் திணைக்களம் ஆரம்பித்ததுடன் இவ்வாண்டில் அவற்றில் 7ஐ நிறைவு செய்தது. இத்துடன், தேசிய அபிவிருத்தி வங்கி (தேஅவ) ஒரு வங்கித் தொழில் நிறுவன மாகப் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தேஅவ இன் பரீட்சிப்பை முதற்றடவையாகத் திணைக்களம் பொறுப்பேற்றது. 1991 இல் ஆரம்பிக்கப்பட்ட 3 வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்பும் மீளாய்விற்குரிய ஆண்டில் முடிவுபெற்றது.

வர்த்தக வங்கிகளின் தலத்துக்கு வெளியேயான கவனக் கண்காணிப்பைப் பொறுத்தமட்டில், திணைக்களம் வர்த்தக வங்கிகளின் நிதி நிலைமைகளையும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வெ.நா.வ. பிரிவு மற்றும் பி.கி.அ. வங்கி என்பவற்றை அவற்றினால் வழங்கப்படும் சொத்துக் கள் பொறுப்புக்களின் மாதாந்த கூற்றுக்களின் அடிப்படையிலும் தொடர்ந்து கண்காணித்து வந்தது. வதிவிட ஏற்றுமதியாளர்களுக்கு வெ.நா.வ. பிரிவின் கடன் வழங்கும் தொழிற்பாடுகள் மீதான கூடிய விபரமான செய்திகளை உள்ளடக்குவதற்காக அறிக்கையிடும் எல்லை விரிவாக்கப்பட்டது. ஒவ்வோர் வர்த்தக வங்கியின் இலாபத் தன்மை, நிதியியல் பலம் என்பவற்றைத் தீர்மானிப் பதற்கும், வங்கித்தொழில் சராசரிக்கு எதிராக ஒவ்வொன்றினதும் செயலாற்ற த்தை ஒப்பிட்டு, ஒப்பீட்டளவிலான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் ஒழுங் கீனமானதும் மிகக் கூடியதுமான முற்பணங்கள், வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் அசைவு, முதலீடுகள் மற்றும் வருமானமும் செலவும் போன்ற விடயங்கள் சார்பான மாதாந்த, அரையாண்டு, ஆண்டு விபர அறிக்கைகளில் கொடுக்கப்பட்ட செய்திகளின் பகுப்பு திணைக்களத்தினால் பொறுப்பேற்கப் பட்டது.

வங்கித் தொழில் சட்டம், திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஏனைய பணிப்புரைகள் என்பனவற்றின் கீழ் ஒழுங்கு விதி தேவைப்பாடுகளின் கடும் பிரயோகம் மற்றும் இசைந்து ஒழுகுதல் என்பவற்றை வங்கித் திணைக்களத்தின் மிக முக்கிய தொழிற்பாடு உள்ளடக்கியிருந்தது. இவை திரவச் சொத்துக் கள் மற்றும் போதுமான மூலதனம் என்பனவற்றின் மிகக் குறைந்த மட்டத்தைப் பேணல், தனிக் கடன் பெறுநரின் எல்லைகளை அவதானித்தல், பணிப்பாளர் களுக்கான கடன் வசதி மற்றும் பணிப்பாளர்களின் அக்கறை மீதான கட்டுப்பாடு கள் கொடுகடன் உச்ச எல்லைகளும் முதலீடுகள் மீதான கட்டுப்பாடுகளும் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுத் தொழிற் படு நிலுவை, முன்னுரிமையல்லாத் துறைக் கொடுகடன் மீதான கொடுகடன் மீதான உச்ச வரம்புகள், நாணயக் கடிதங்கள் மீதான காசு வரையறைத் தேவைகள் என்பன மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட எல்லைக்குள் இருக்கின்ற னவா எனத் தீர்மானிக்கும் நாளாந்தக் கண்காணிப்பு திணைக்களத்தின் துணைத் தொழிற்பாடுகளின் கீழ் வருகின்றது.

செயலாற்றமல்லாத முற்பணங்களுக்கான வழங்கல் மீது 1991 பெப்புருவரி யில் திணைக்களத்தால் நெறிமுறைகள் வழங்கப்பட்டு, இந் நியதிகளின்படி எல்லா வர்த்தக வங்கிகளும் இழப்பு, ஐயப்பாடு, தரக்குறைவானவை எனப் பகுப்பாய்வு செய்யப்பட்ட முற்பணங்கள் தொடர்பாக முறையே 100 சதவீத

50 சதவீத, 20 சதவீதத்தை வழங்கும்படி கேட்கப்பட்டதுடன், இவை 1992 ஏப்பிறலில் முழுமையான இசைவுடன் செய்து முடிக்கப்பட்டன. சட்ட நோக்கங்களுக்காகப் பிணைகளை மதிப்பீடு செய்தல் நெறிமுறைகளில் அடக்கப்பட்டவற்றின் முக்கிய விடயமாகக் காணப்பட்டது. இதன்படி இவ்வருடத்தில் விசேடமாக இத்தேவைகளுடன் சரியான இசைவைப் பேணுவதில் திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டது.

இலண்டனில் பீசீசிஐ இன் முறிவு மற்றும் 1991 யூலையில் வங்கித்தொழில் செயற்பாடுகளின் உலகளாவிய இடைநிறுத்தம் என்பவற்றைத் தொடர்ந்து 1991 இன் எண் 2 கொண்ட அவசரகால (வங்கித் தொழில் சிறப்பு ஏற்பாடுகள்) ஒழுங்குவிதிகளின் கீழ் வரையறுக்கப்பட்ட பேங்க் ஓவ் கொமர்ஸ் அன்ட் கிரடிட் இன்டர் நசனல் (ஓவசீஸ்) வங்கியின் உள்நாட்டு வங்கித் தொழிற்பிரிவின் தொழிற்பாடுகள் 1992 சனவரி 1 இலிருந்து வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டது. இதனால் திணைக்களம் பீசீசீஐ இன் விவகாரங்கள் தொடர்பாகப் பல விடயங்கள் மீது பரீட்சிப்புக்களையும் நிவாரண நடவடிக்கை எடுப்பதிலும் வெகுவாக ஈடுபட்டது. பிசிசிஐ இன் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயம் மற்றும் வதிவுடைய இலங்கையரல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வைத்திருப்போருக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிவாரணத் திட்டமொன்றை வடிவமைத்தமை எடுக்கப்பட்ட வழிமுறைகளில் முக்கியமானதாகும். நிவாரணத் திட்டம் இரண்டு கட்டங்களில் முறையே 1992 சனவரியிலும், ஒற்றோபரிலும் ஆரம்பிக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்பட்டது. நிவாரணத் திட்டத்தின் கட்டம் I இன் கீழ், ஐ.அ. டொலர்கள் 4,000 இற்குக் குறைந்த நிலுவைகளைக் கொண்ட வைப்பாளர்கள் முழுமையாகத் தீர்க்கப்பட்டவேளையில், பெருமளவு நிலுவைகளை உடையவர்கள் பகுதி பகுதியாகத் தீர்க்கப்பட்டனர். பெருமளவு நிலுவைகளைக் கொண்ட வைப்பாளர்கள் அவர்களின் வைப்புக்களின் அளவைப் பொறுத்து அவர்களின் வைப்புக்களின் படிப்படியாகக் குறையும் விகிதாசாரத்தில் தீர்க்கப்பட்டனர். கட்டம் I இன் கீழ் அவர்களின் வைப்புக்களின் முழுத் தொகையைப் பெறாத பெரும் வைப்பாளர்கள் நிவாரணத்திட்டத்தின் கட்டம் II இன் கீழ் முழுமையாகத் தீர்க்கப்பட்டனர். இக் கொடுப்பனவுகள் வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றப்படமாட்டாது என்ற நிபந்தனையின்கீழ், இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்பட்டன. பீசீசீஐ இன் வெ.நா.வ. பிரிவுடன் இணைந்த விடயங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒழித்துக்கட்டுபவருடன் தற்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இரு அரச வங்கிகளைப் பொறுத்தமட்டில், இத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட தலப் பரீட்சைகள் வங்கிகளுக்கு ஏற்பட்ட கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகளின் பற்றாக்குறையின்பால் முகாமைத்துவத்தின் கவனத்தை ஈர்த்தன. அரசினால் நிவாரண நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டதுடன் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டங்களுக்கு இரு அரச வங்கிகளின் மூலதன அமைப்பினை மீளக் கொண்டுவருவதற்காக அவற்றை மீள் மூலதனப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டு விட்டன.

ஆய்விற்குரிய ஆண்டில், 1987 இல் நடைமுறைக்கு வந்த வைப்புக் காப்புறுதித் திட்டத்தை திணைக்களம் தொடர்ந்து நிருவகித்து வந்தது. எனினும் இத் திட்டத்தில் பங்குகொள்ளும் இரண்டு வர்த்தக வங்கிகள் விலகியதைத் தொடர்ந்து

இத் திட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 11 இற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் காப்புறுதிக் கட்டுப்பணம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒவ்வொரு ரூ. 100 இற்கும் 01 சதத்திலிருந்து 3.75 சதத்திற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டது.

வங்கிச் சட்டம் மற்றும் நாணய விதிச் சட்டம் என்பவற்றிற்குத் திருத்தங்கள் மேற்கொள்ளல் தற்போது ஆராயப்பட்டு வருவதுடன் திணைக்களம் அவ் வாறான திருத்தங்களை உருவாக்குவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகின்றது. வங்கி மற்றும் நிதி, ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வையை உள்ளடக்கும் பல விடயங்கள் மீதான வங்கித் தொழில் மற்றும் நிதி பற்றிய சனாதிபதி ஆணைக் குழுவுக்குத் திணைக்களம் கருத்துக்களை எடுத்துரைத்தது.

## வங்கியல்லா நிதி நிறுவனங்கள்

ஒழுங்கான தலப் பரீட்சிப்புக்கள், நிதிக் கூட்டு நிறுவனங்களினால் சமர்பிக்கப் பட்ட புள்ளிவிபரத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தலத்திற்கு வெளியே இருந்து மேற்கொண்ட கண்காணிப்பு என்பன மூலம் மத்திய வங்கி அதனுடன் பதிவு செய்யப்பட்டுள்ள நிதிக் கூட்டு நிலையங்களைத் தொடர்ந்தும் கண்காணித் தும் மேற்பார்வை செய்தும் வந்தது.

1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1992 இல் நான்கு கூட்டு நிலையங்கள் பதிவு செய்யப்பட்டன. 1991 இல் நிதி வியாபாரத்தை மேற்கொண்டிருந்த 24 நிதிக் கூட்டு நிலையங் களில் ஒரு கூட்டு நிலையம் இழப்புக்களின் காரணமாகக் கேடுறாத மூலதனமான ரூ. 50 இலட்சத்தினைப் பேணத் தவறியதன் காரணமாக 1992 இல் நிதி வியாபாரத்தில் ஈடுபடமுடியாமல் போயிற்று.

1988 இல் நாணயச் சபையினால் வடிவமைக்கப்பட்ட வைப்பு நிவாரணத் திட்டம் 1992 இலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. 1992 இறுதியில் இத் திட்டத்தின்கீழ் இடருக்குள்ளான எட்டு நிதிக் கூட்டு நிலையங்களின் 40,590 வைப்புக்களில் 36,111 வைப்புக்களின்மீது நிவாரணக் கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்பட்டன. செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதி ரூ. 4,620 இலட்சமாகும். இத்திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் மத்திய வங்கி யினால் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களின் மூலம் பெருமளவிற்கு நிதியிடப் பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் வைப்பு நிவாரணத் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்காக மத்திய வங்கி ரூ. 800 இலட்சத்தினைப் பகிர்ந்தளித்தது. ஒரு கூட்டு நிலையத்தைப் பொறுத்தவரையில் கூட்டு நிலையத்தின் சொத்துக்களது விற்பனை மற்றும் படுகடன் மீளப் பெறுகைகளிலிருந்து பெறப்பட்ட அதன் சொந்த நிதியைப் பயன்படுத்தி மேலதிக நிவாரணக் கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்பட்டன.

1992 பெப்புருவரியில் நிதியியல் பிரச்சினைகளுக்குட்பட்டிருந்த பதிவு செய் யப்பட்ட நிதிக் கூட்டு நிலையத்தின் முகாமையும் நிருவாகமும் நாணயச் சபை யினால் பொறுப்பேற்கப்பட்டதுடன் மீள் நிதியிடல் கடன்களின் மூலமான நிதிக் கடன் வசதிகளும் வழங்கப்பட்டன. 1992 இல் இக் கூட்டு நிலையத்திற்கு வழங்கப்பட்ட மொத்த மீள் நிதியிடல் கடன்கள் ரூ. 8,130 இலட்சமாக விளங்கின.

1992 இல் நாணயச் சபையினால் பின்வரும் பணிப்புரைகள் வழங்கப் பட்டன.

தனியொரு கடன் பெறுநர் எல்லை மீதான பணிப்புரை

தனியொரு கடன் பெறுநருக்கு வழங்கப்பட்ட ஆகக்கூடிய தனியொரு முற்பணம் அல்லது வழங்கப்பட்ட முற்பணங்களின் மொத்தம் மற்றும் வழங்கப் பட்ட முற்பணத்தின்மீது எந்த ஒரு நேரத்திலும் வெளிநின்ற மொத்தத் தொகை அந் நிதிக் கூட்டு நிலையத்தின் மூலதன நிதியத்தில் 10 சதவீதத்தினை விஞ்சக் கூடாது என்ற தேவைப்பாட்டினைக் கொண்ட பணிப்புரை 1992 யூன் 19 ஆம் நாளன்று வழங்கப்பட்டது. மேலும் பொதுப் பணிப்பாளர்கள் அல்லது பொதுப் பங்காளர்கள் அல்லது பொது உரிமையாளர்களைக் கொண்ட எந்தவொரு கூட்டுக்குழு அல்லது கூட்டல்லா கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட ஆகக்கூடிய தனியொரு முற்பணம் அல்லது வழங்கப்பட்ட முற்பணங்களின் மொத்தம் மற்றும் வழங்கப்பட்ட முற்பணத்தின்மீது எந்த ஒரு நேரத்திலும் வெளிநின்ற மொத்தத் தொகை அந் நிதிக் கூட்டு நிலையத்தின் மூலதன நிதியத்தில் 15 சதவீதத்தினை விஞ்சக் கூடாது.

அறவிடமுடியாத மற்றும் ஐயத்திற்கிடமான படுகடனுக்கான
ஏற்பாடுகள் மீதான 1992 இன் பணிப்புரை எண் 2 இற்கான திருத்தம்

நிதிக் கூட்டு நிலையங்கள் அறவிடமுடியாத மற்றும் ஐயத்திற்கிடமான படுகடன்கள் தொடர்பாகப் பின்வரும் முறையில் ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்ற திருத்தப்பட்ட பணிப்புரையை 1992 ஒற்றோபர் 24 ஆம் நாளன்று நாணயச் சபை வெளியிட்டது.

(1) 12—24 மாத காலப் பகுதியில் நிலுவையிலிருந்த எல்லா முற்பணங் களிலும் இருபத்தைந்து (25) சதவீதம்.

(2) 25—36 மாத காலப் பகுதியில் நிலுவையில் இருந்த எல்லா முற்பணங் களிலும் ஐம்பது (50) சதவீதம்.

(3) 36 மாதங்களுக்குக் கூடுதலாக நிலுவையில் இருந்த அனைத்து முற் பணங்களில் நூறு (100) சதவீதம்.

எனினும் திருத்தம் மேற்குறிப்பிட்ட ஏற்பாட்டினை நிறைவேற்றத் தவறும் எந்தவொரு நிதிக் கூட்டு நிலையமும் 1992 மாச்சு 31 ஆம் நாள் முடிவடைகின்ற நிதியாண்டிற்கான இலாபத்திலிருந்து பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்துவத னைத் தவிர்ப்பதற்கு இடமளிக்கிறது.

பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் புதிய ஒழுங்கு விதியொன்று அதாவது வைப்பாளர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவு பற்றிய 1992 இன் எண் 1 கொண்ட ஒழுங்கு விதி 1992 சனவரி 29 இல் சனாதிபதி யினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன்படி, நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத் தின் பிரிவு 20 இன் கீழ் நாணயச் சபைக்கு நிதிக் கூட்டு நிலையமொன்று பொறுப்புவிக்கப்படுமிடத்து, வைப்பாளர்களின் கேள்வியை ஈடுசெய்வதற்காகப் பொறுப்பேற்கப்பட்ட நிதிக் கூட்டு நிலையத்தின் வியாபார ஆய்வு மேற்சொள்ளப்

படும் வரை பொறுப்பேற்கப்பட்ட நிதிக் கூட்டு நிலையத்தின் பொறுப்புக்கள் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படும் நிவாரணக் கொடுப்பனவுகளுக்கேற்ப வரையறுக்கப்படும்.

1991 இல் நான்கு கூட்டு நிலையங்கள் தொடர்பாக அவற்றின் அலுவல்களை ஒடுக்குவதற்காகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இக் கூட்டு நிலையங்களில் ஒன்றான, வரையறுக்கப்பட்ட சாராபூமி இன்வெஸ்மன்ட் கூட்டு நிலையத்தினை (தனியார்) ஒடுக்குவதற்கு 1992 இல் கட்டளை வழங்கப்பட்டதுடன் அதற்கேற்ப ஒழித்துக் கட்டுபவரும் நியமிக்கப்பட்டார். மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட மற்றைய இரு கூட்டு நிலையங்களான வரையறுக்கப்பட்ட கிடேகி பினான்ஸ் அன்ட் இன்வெஸ்மண்ட், வரையறுக்கப்பட்ட காசல் பினான்ஸ் என்பன தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இன்னமும் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வரையறுக்கப்பட்ட கவுஸ் அன்ட் புறபெட்டி றேடர்ஸ் இனை ஒடுக்குவதற்காகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு, கூட்டு நிலையத்தின் வைப்புப் பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்வதற்குக் கூட்டு நிலையத்தின் பங்குடமைப் பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட எடுத்துரைப்புக்களுக்கு இணக்கம் காணப்பட்டமையின் காரணமாக நாணயச் சபையினால் புறக்கீடு செய்யப்பட்டது.

## அபிவிருத்தி நிதி

1992 இல் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் (நநீகொநி) நிருவாகம், சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கான கொடுகடன் (சிநகை) உத்தரவாதத் திட்டங்களின் தொழிற்பாடு, பேருந்துக் கொள்வனவுக் கடன்கள் (பேகொக), தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்பன தொடர்ந்து அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் (அநிதி) பொறுப்பாகவிருந்தன. 1992 யூலையில் அ.நி. திணைக்களம் பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள்முகவர் நிலையத்தின் (பஅஐநாமு) வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் (வீஉகுவபுதி) கட்டம் IV இன் கீழ் குறைந்த வருமானம் பெறும் குழுவினருக்காக வீடமைப்பு மீள் நிதியிடல் திட்டமொன்றினை நிறுவியது.

### நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம் (நநீகொநி)

1991 திசெம்பரில் நடைமுறைக்கு வந்த நநீகொநி இன் கீழான மீள் நிதியிடல் வசதிகளின் இடைநிறுத்தம் 1992 இலும் தொடர்ந்திருந்தது. எனினும் நநீகொநி இன் கீழ் முந்திய ஆண்டில் மீள் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் செயலாற்றத்தின்மீது திணைக்களம் பின் தொடர்தலை மேற்கொண்டது.

### கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் ஆறு உத்தரவாதத் திட்டங்களின் கீழான கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளின் தொகுப்பு 1992 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே அட்டவணை 2.5 இலும், 2.6 இலும் தரப்பட்டுள்ளது.

**சிறிய அளவு கைத்தொழில்கள் திட்டம் (சிநகை)**

*1978—1981* காலப் பகுதியில் சிஅகை திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தம் *767* கடன்களில் ரூ. *5.8* இலட்சம் கொண்ட *10* கடன்கள் மட்டும் *1992* இறுதியில் இன்னும் தொழிற்பட்டுக் கொண்டிருந்தன. உரிய காலத்தில் செலுத்தப்படாததென வகைப்படுத்தப்பட்ட இக்கடன்கள் ரூ. *4.4* இலட்சம் கொண்ட உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்டிருந்தன.

**சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்-I (சிநகை-1) திட்டம்**

*1979—1982* காலப் பகுதியில் சிநகை–*1* திட்டத்தின்கீழ் ரூ. *2,860* இலட்சம் கொண்ட கடன்களை உள்ளடக்கும் *1,670* உத்தரவாதங்கள் வழங்கப் பட்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் (பகொநி) மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக *1992* இறுதியில் ரூ. *300* இலட்சம் கொண்ட *112* உத்தரவாதங்கள் ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. மொத்தமாக *1,216* கடன்கள் முற்றாகத் திருப்பிச் செலுத்தப்பட்டன. *1992* இல் ரூ. *330* இலட்சம் மொத்தப் பொறுப்பைக் கொண்ட *334* உரிமைக் கோரல்கள் பெறப்பட்டு ரூ. *180* இலட்சம் கொண்ட *224* உரிமைக் கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ப.கொ.நி.களினால் சமர்ப்பிக்கப்பட்ட உரிமைக் கோரல்களைச் செயற்றிட்டப் பரிசோதனையின்றியே தீர்ப்பனவு செய்வதென்ற தீர்மானத்திற்கு இணங்க மத்திய வங்கியின் பொறுப்பில் *50* சதவீதத்தை விஞ்சாத இடைக்காலக் கொடுப்பனவாக *27* உரிமைக் கோரல்கள் தொடர்பாக ரூ. *21* இலட்சம் செலுத்தப்பட்டது. கடன்பெறுநர்களால் உரிமைக்கோரல்கள் சமர்ப்பித்ததன் பின் ரூ. *20* இலட்சம் கொண்ட *37* உரிமைக் கோரல்கள் தொடர்பான கடன் மீளச் செலுத்தப்பட்ட வேளையில் ப.கொ. நிறுவனங்கள் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. *48* இலட்சம் கொண்ட *28* உரிமைக் கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. ப.கொ.நி. இனால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்கள் காரணமாக அல்லது கடன் பெறுநர்கள் தமது உரிமைக் கோரல்களைச் சமர்ப்பித்த பின் அக்கடன்களை மீளச் செலுத்துவதற்கு மீண்டும் தொடங்கியமை காரணமாக ரூ. *30* இலட்சம் கொண்ட *12* உரிமைக் கோரல்களைச் சீர்தூக்கிப்பார்த்தல் பிற்போடப்பட்டது. *1992* திசெம்பர் இறுதியில் ரூ. *58* இலட்சம் ஆகக் கூடிய உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. *97* இலட்சம் பெறுமதியான *61* கடன்கள் மட்டும் தொழிற்பாட்டிலிருந்ததாக அறிவிக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணமும் மத்திய வங்கியினால் பெறப்பட்ட உரிமைக் கோரலுக்குப் பிந்திய மீளப் பெறுகைகளும் முறையே ரூ. *121* இலட்சமாகவும் ரூ. *54* இலட்சமாகவும் விளங்கின.

**சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்-11 (சிநகை-11) திட்டம்**

*1982—1989* காலப் பகுதியில் சிநகை–*11* திட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட மொத்தம் *2,531* கடன்களில் ரூ. *4,420* இலட்சம் கொண்ட *1,111* கடன்கள் முற்றாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் ப கொ நி. மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக *1992* இறுதியில் ரூ. *1,670* இலட்சம் பெறுமதி கொண்ட *340* உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. *1992*

இறுதியில் ரூ. 500 இலட்சம் பொறுப்பைக் கொண்ட மொத்தம் 204 உரிமைக் கோரல்கள் பெறப்பட்டன. இவற்றில் ரூ. 260 இலட்சம் கொண்ட 113 உரிமைக் கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நியதிகளின்படி ரூ. 7 இலட்சம் கொண்ட 5 உரிமைக் கோரல்கள் தொடர்பாக மத்திய வங்கியின் பொறுப்பில் 50 சதவீதத்தை விஞ்சாத இடைக்காலக் கொடுப்பனவு செய்யப்பட்ட வேளையில் ப.கொ.நி. மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. 91 இலட்சம் கொண்ட 39 உரிமைக் கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. கடன் பெறுநர்கள் மத்திய வங்கிக்கு உரிமைக் கோரல்களைச் சமர்ப்பித்த பின் 2 உரிமைக் கோரல்கள் தொடர்பான கடன்கள் மீளச் செலுத்தப் பட்டன. 1992 இறுதியில் ப.கொ.நி. இனால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களின் பேரில் அல்லது கடன் பெறுநர்கள் உரிமைக் கோரல் களைச் சமர்ப்பித்த பின் கடன்களை மீளச் செலுத்துவதற்கு மீண்டும் தொடங்கிய மையால் ரூ. 75 இலட்சம் கொண்ட 24 உரிமைக் கோரல்களைச் சீர்தூக்கிப் பார்ப்பது பிற்போடப்பட்டது. 1992 இறுதியில் ரூ. 1,650 இலட்சம் கொண்ட மொத்த மத்திய வங்கி உத்தரவாதப் பொறுப்பினையுடைய ரூ. 2,870 இலட்சம் பெறுமதியுடைய 923 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன. இவற்றில் ரூ. 1,630 இலட்சம் பொறுப்பினைக் கொண்ட 678 கடன்கள் நிலுவையிலுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

1992 திசெம்பர் 31 இல் இத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 270 இலட்சமாக அமைந்த வேளையில் மத்திய வங்கியினால் உரிமைக் கோரலுக்குப்பின் பெறப்பட்ட மீளப் பெறுகைகள் ரூ. 70 இலட்சமாக விளங்கின.

**சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்-111 (சிநகை-111) திட்டம்**

1988 யூலையில் தொழிற்பாடுகளைத் தொடங்கிய சிநகை III இன் கீழ் 1992 இறுதியில் ரூ. 19,550 இலட்சம் கொண்ட 3,129 கடன்களுக்கு மட்டும் உத்தரவாதமளிக்கப்பட்டது. ப.கொ.நி. இன் இசைவுடன் எடுக்கப்பட்ட தீர் மானத்தின் நியதிகளின்படி சிநகை 111 இன் கீழ் முதலில் ஒப்புதலளிக்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்கள் தேசிய அபிவிருத்தி வங்கியினால் (தேஅவ) சிநகை IV இற்கு மாற்றப்பட்டன. இத் தீர்மானத்தின்படி மத்திய வங்கி சிநகை IV உத்தரவாதத் திட்டத்திற்கு மாற்றல்களைச் செய்தது. 1991 உடன் ஒப்பிடுகை யில் (3,883) 1992 இல் உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களில் (3,129) ஏற்பட்ட வீழ்ச்சியை இது விளக்குகின்றது.

இத் திட்டத்தின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட 3,129 கடன்களில் ரூ. 990 இலட்சம் கொண்ட 227 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டிருக்கையில் ரூ. 2,020 இலட்சம் கொண்ட 267 கடன்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு ப.கொ.நி இணங்கி ஒழுகாமை காரணமாகப் புறக்கீடு செய்யப் பட்டன அல்லது காலாவதியாகின. 1992 திசெம்பர் 31 இல் ரூ. 130 இலட்சம் கொண்ட மத்திய வங்கி உத்தரவாதப் பொறுப்புடனான 36 உரிமைக் கோரல்கள் பெறப்பட்டன. இவற்றில் ரூ. 34 இலட்சம் கொண்ட 16 உரிமைக் கோரல்கள் தீர்க்கப்பட்டதுடன், ரூ. 17 இலட்சம் கொண்ட 5 உரிமைக் கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. இவ்வாறான உரிமைக் கோரல்களைச் சமர்ப்பித்தபின்னர் கடன் பெறுநர்களால் சம்பந்தப்பட்ட கடன் கணக்குகளை ஒழுங்கு முறைப்

## 31-12-92 இல் உள்ளவாறான மத்திய வங்கிக் கொடுகடன்

| திட்டங்களும் ஆண்டுகளும் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் (சிஅகை) | | சிறிய நடுத்தர கைத்தொழில்–I | |
|---|---|---|---|---|
| | 1992 | | 1992 | |
| விடயம் | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் … … | 767 | 31.20 | 1670 | 286.10 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் … | 767 | 23.40(ஆ) | 1670 | 157.50(இ) |
| 2.1 முழுமையாக மீளச்செலுத்தப்பட்ட கடன்கள் … | 597 | 22.90 | [216 | 178.83 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் … | 90 | 4.89 | 112 | 30.38 |
| **கோரல்கள்** | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக்கோரல்கள் … | 88 | 4.32(எ) | 334 | 75.24(எ) |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்புக்கள் … | — | 2.42 | — | 33.02 |
| 3.3 **தீர்க்கப்பட்ட கோரல்கள்** | | | | |
| 3.3.1 முழுமையாக தீர்க்கப்பட்டவை … | 63 | 1.68 | 224 | 17.84 |
| 3.3.2 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை … | 1 | 0.00(எ) | 27 | 2.11 |
| 3.3.3 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் … | 7 | 0.22 | 28 | 4.78 |
| 3.3.4 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் (ஏ) முழுமையாகச் செலுத்தப்பட்டகடன்கள் | 16 | 0.24 | 37 | 2.03 |
| 3.3.5 பிற்போடப்பட்ட கோரல்கள் (ஒள) … | 1 | 0.27 | 12 | 3.04 |
| 3.3.6 முடிவுறா கோரல்கள் (ஒள) … | — | — | 6 | 1.06 |
| 3.3.7 புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள்(ஒள) … | — | — | — | — |
| 4.1 வெளிநிற்கும் கடன்கள் … | 10 | 0.58(ஐ) | 61 | 9.68(ஐ) |
| 4.2 (இதில் செலுத்தப்படாது உள்ளவை) … | 10 | 0.58 | 61 | 9.68 |
| 4.3 வெளிநின்ற உத்தரவாதங்கள்மீதான மத்திய வங்கியின் பொறுப்பு … | 10 | 0.44(ஆ) | 61 | 5.81(இ) |
| 5. கட்டணச் சேகரிப்புக்கள் … | — | 1.00 | — | 12.07 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீட்புக்கள் … | — | 0.61 | — | 5.44 |

(அ) தேசிய அபிவிருத்தி வங்கியால் சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் IVற்கு மாற்றப்பட்ட கடன்கள் நீங்கலாக.

(ஆ) வெளிநிற்கும் கடன்ககளில் 75 சதவீதம்.

(இ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 400,000/- வரையறைக்குட்பட்டு வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(ஈ) ரூ. 2,000,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை ஆகக்கூடியது ரூ. 800,000 இற்கும் ரூ. 2,000,000 இற்கும் ரூ. 4,000,000 இற்கும் இடைப்பட்ட கடன்களுக்கு ஆகக்கூடியது ரூ. 1,200,000 இற்கும் உட்பட்டு வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(உ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 1,600,000 என்பதற்கு உட்பட்டு ரூ. 2,000,000, ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 3,000,000, ரூ. 3,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுககு முறையே 80 சதவீதம், 60 சதவீதம், 40 சதவீதம்.

அட்டவணை 2.5

## உத்தரவாதத் திட்டங்களின் தொகுப்பு

(பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்)

சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை)

| சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்-II | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்–III | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் IV | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1991 | | 1992 | | 1991 | | 1992 | | 1992 | |
| எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 2531 | 1,392.54 | 2531 | 1,392.54 | 3883 | 2,373.20 | 2129 | (அ) 1,955.04 | 2621 | 1,915.99 |
| 2531 | (உ) 713.63 | 2531 | (உ) 713.63 | 3883 | (ஊ) 1,660.65 | 3129 | (ஊ) 1,312.18 | 2621 | (எ) 1,137.52 |
| 707 | 232.78 | 1111 | 441.65 | 48 | 17.50 | 227 | 99.36 | 6 | 1.26 |
| 276 | 142.24 | 340 | 167.37 | 208 | 101.70 | 267 | 202.09 | 22 | 11.62 |
| 180 | (எ) 80.55 | 204 | (எ) 84.71 | 11 | (எ) 5.02 | 36 | (எ) 14.54 | 1 | (எ) 0.14 |
| — | 45.71 | — | 49.87 | — | 3.22 | — | 12.74 | — | 0.14 |
| 99 | 23.26 | 113 | 25.94 | 6 | 1.60 | 16 | 3.45 | — | ... |
| 5 | 0.71 | 5 | 0.71 | — | — | — | — | — | — |
| 39 | 9.08 | 39 | 9.08 | 1 | 0.56 | 5 | 1.70 | — | — |
| 2 | 0.58 | 2 | 0.58 | — | — | — | — | — | — |
| 25 | 7.12 | 24 | 7.51 | 2 | 0.46 | 3 | 0.40 | — | — |
| 5 | 1.69 | 21 | 5.16 | 2 | 0.59 | 12 | 7.18 | 1 | 0.14 |
| 5 | — | — | — | — | — | — | — | — | — |
| 1405 | (ஐ) 422.71 | 923 | (ஐ) 287.27 | 3620 | (ஐ) 1,825.42 | 2614 | (ஐ) 1,128.53 | 2592 | (ஐ) 840.75 |
| 897 | 184.05 | 678 | 163.37 | 395 | 36.37 | 893 | 73.16 | — | — |
| 1405 | (ஈ) 265.49 | 923 | (ஈ) 164.76 | 3620 | (உ) 1,284.42 | 2614 | (உ) 759.41 | 2592 | (ஊ) 579.09 |
| — | 25.42 | — | 27.17 | — | 18.79 | — | 27.96 | — | 2.58 |
| — | 3.11 | — | 6.98 | — | 0.00 | — | 0.49 | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(ஊ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடிய ரூ. 16 இலட்சம் என்பதற்குட்பட்டு ரூ. 5 இலட்சம், ரூ. இலட்சம், ரூ. 10 இலட்சம், ரூ. 10 இலட்சம், ரூ. 20 இலட்சம், ரூ. 20 இலட்சம், ரூ. 80 இலட்சம் என்பனவற்றிற்கு முறையே 90% 80%, 70%, 60%.

(எ) ஒன்றுசேர்ந்த வட்டியையும் உள்ளடக்கிய செலுத்தப்படாத தொகை.

(ஏ) ரூ. 4504.75 தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது

(ஐ) மீட்கப்பட்ட தவணைப் பணம் நீங்கலாக

(ஒ) 2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஓ) 4.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 2.6

### சிறிய நடுத்தரக் கைத்தொழில் II, III, IV இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்— கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு 1992 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

( ரூ. '000 )

| கைத்தொழில் | சிறிய நடுத்தரக்கைத்தொழில் II, III, IV 1982—1992 | | | | | | சிறிய நடுத்தரக்கைத்தொழில் III 1992 | | | | | | சிறிய நடுத்தரக்கைத்தொழில் IV 1992 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்கள் | % | கடன் தொகை ரூ. | % | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை ரூ. | % | வழங்கப்பட்ட கடன்கள் | % | கடன் தொகை ரூ. | % | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை ரூ. | % | வழங்கப்பட்ட கடன்கள் | % | கடன் தொகை ரூ. | % | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை ரூ. | % |
| 1. உணவு பதனிடல் .. | 2,090 | 25.2 | 1,531,745 | 24.0 | 773,945 | 24.0 | 4 | 16.0 | 5,245 | 16.5 | 3,356 | 16.8 | 565 | 21.5 | 377,333 | 19.7 | 225,526 | 19.8 |
| 2. ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் .. | 187 | 2.3 | 105,635 | 1.7 | 57,941 | 1.8 | 1 | 4.0 | 306 | 1.0 | 245 | 1.2 | 49 | 1.9 | 24,074 | 1.3 | 17,024 | 1.5 |
| 3. இறப்பர் உற்பத்திகள் .. | 197 | 2.4 | 214,134 | 3.4 | 108,974 | 3.4 | 0 | 0.0 | 0 | 0.0 | 0 | 0.0 | 46 | 1.8 | 49,687 | 2.6 | 26,855 | 2.4 |
| 4. உலோக உற்பத்திகள் .. | 727 | 8.8 | 439,815 | 6.9 | 223,830 | 6.9 | 3 | 12.0 | 1,485 | 4.7 | 1,188 | 6.0 | 212 | 8.1 | 126,563 | 6.6 | 75,095 | 6.6 |
| 5. கட்டடவாக்கப் பொருட்கள் | 594 | 7.2 | 375,996 | 5.9 | 222,833 | 6.9 | 3 | 12.0 | 2,612 | 8.z | 1,730 | 8.7 | 130 | 5.0 | 79,533 | 4.2 | 54,233 | 4.8 |
| 6 கட்டடவாக்க ஒப்பந்தம் .. | 92 | 1.1 | 138,528 | 2.2 | 54,475 | 1.7 | 0 | 0.0 | 0 | 0.0 | 0 | 0.0 | 31 | 1.2 | 64,411 | 3.4 | 24,807 | 2.2 |
| 7 மர உற்பத்திகள் .. | 531 | 6.4 | 276,480 | 4.3 | 154,114 | 4.8 | 2 | 8.0 | 2,210 | 7.0 | 1,768 | 8.9 | 151 | 5.8 | 75,505 | 3.9 | 54,547 | 4.8 |
| 8. ஆடைகள் .. | 610 | 7.4 | 609,015 | 9.6 | 309,718 | 9.6 | 1 | 4.0 | 3,000 | 9.5 | 1,600 | 8.0 | 188 | 7.2 | 184,877 | 9.6 | 92,701 | 8.1 |
| 9. புடவைகள் .. | 214 | 2 6 | 262,071 | 4.1 | 116,064 | 3.6 | 0 | 0.0 | 0 | 0.0 | 0 | 0.0 | 82 | 3.1 | 102,429 | 5.3 | 51,403 | 4.5 |
| 10. தொழிற்கூடத் திருத்தல் | 314 | 3.8 | 172,648 | 2.7 | 94,938 | 2.9 | 2 | 8.0 | 1,725 | 5.5 | 1,380 | 6.9 | 101 | 3.9 | 48,689 | 2.5 | 35,753 | 3.1 |
| 11. ஏனையவை .. | 2,725 | 32.9 | 2,246,717 | 35.1 | 1,107,170 | 34.z | 9 | 36.0 | 15,048 | 47.5 | 8,686 | 43.5 | 1,066 | 40.5 | 782,888 | 40.9 | 479,574 | 42.2 |
| மொத்தம் .. | 8,281 | 100.0 | 6,372,784 | 100.0 | 3,224,002 | 100.0 | 25 | 100.0 | 31,631 | 100.0 | 19,953 | 100.0 | 2,621 | 100.0 | 1,915,989 | 100.0 | 1,137,518 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

படுத்தியதன் காரணமாக 3 உரிமைக் கோரல்களைச் சீர்தூக்கிப்பார்த்தல் பிற்போடப்பட்டது. 1992 திசெம்பர் இறுதியில் ரூ. 7,590 இலட்சம் கொண்ட ஆகக்கூடிய உத்தரவாதப் பொறுப்பினையுடைய ரூ. 11,280 இலட்சம் பெறுமதியுடைய 2,614 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன.

இத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணங்கள் 1992 திசெம்பர் 31 இல் ரூ. 280 இலட்சமாக விளங்குகையில் இதே காலப் பகுதியில் உரிமைக் கோரல்களுக்குப் பிந்திய மீளப் பெறுகைகளாக மத்திய வங்கியால் ரூ. 5 இலட்சம் மீளப் பெறப்பட்டது.

**சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள்–IV (சிநகை–IV) திட்டம்**

சிநகை–iv திட்டம் நாணயச் சபையின் ஒப்புதலுடன் 1991 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1992 மாச்சில் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. 1992 திசெம்பர் இறுதியில் ரூ. 19,160 இலட்சம் கொண்ட 2,621 கடன்கள் உத்தர வாதமளிக்கப்பட்டன. இக் கடன்கள் சார்பாக மத்திய வங்கியின் பொறுப்பு ரூ. 11,370 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் ரூ. 13 இலட்சம் கொண்ட 6 கடன்கள் முழுமையாகத் தீர்க்கப்பட்ட வேளையில் 22 உத்தரவாதங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு ப.கொ.நி. இணங்கி ஒழுகாமை காரணமாகப் புறக்கீடு செய்யப்பட்டதாகவோ காலங்கடந்தவையாகவோ விளங்கின. 1992 இன் இறுதியில் 2,592 உத்தரவாதங்கள் செயற்பாட்டிலிருந்தன. இவை மத்திய வங்கியின் ரூ. 5,790 இலட்சம் பொறுப்பினைக் கொண்ட மொத்தம் ரூ. 8,410 இலட்சம் பெறுமதியான கடன்களை உள்ளடக்கியிருந்தன.

சிநகை–iv திட்டத்தின் கீழ் உத்தரவாதக் கட்டுப்பணம், முன்னைய மூன்று சிநகை திட்டங்களின் கீழ் உள்ளதைப் போலன்றி, ஆண்டுதோறும் சேகரிக்கப்பட்டன. 1992 இறுதியில் மொத்தமாக ரூ. 26 இலட்சம் சேகரிக்கப் பட்டது. 1992 இன் இறுதியில் உள்ளவாறான இத்திட்டத்தின் செயலாற்றம் அட்டவணை 2.6 இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

சிநகை–ii, iii, iv திட்டங்களின் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கைத்தொழில் ரீதியான பகுப்பு அட்டவணை 2.6 இல் தரப்பட்டுள்ளது.

**பேருந்து கொள்வனவுக் கடன் (பேகொக) திட்டம்**

பொதுமக்களின் போக்குவரத்துக்காக பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்குத் தனியார் பேருந்து தொழிற்பாட்டாளர்களுக்கு ப.கொ.நி. ஆல் வழங்கப் பட்ட கடன்களை உள்ளடக்கும் விதத்தில் மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்றினை 1990 நவெம்பரில் அறிமுகப்படுத்தியது. 1992 இறுதியில் மீள் நிதியிடலை வழங்குவதற்குத் தேசிய அபிவிருத்தி வங்கி வசமிருந்த மூலவளங்கள் முழுமையாகச் செலவிடப்பட்டமையால் இத் திகதியிலிருந்து இத்திட்டம் தொழிற்படுவது முடிவுற்றது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 8,710 இலட்சம் கொண்ட மத்திய வங்கியின் பொறுப்புடன் ரூ. 10,970 இலட்சம் பெறுமதி கொண்ட 1,928 கடன்கள் உத்தரவாதமளிக்கப்பட்டன. 1992 இன் இறுதியில் ரூ. 48 இலட்சம் கொண்ட 9 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டிருக்கையில் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு ப.கொ.நி. இணங்கி ஒழுகாமை காரணமாக ரூ. 590 இலட்சம் பெறுமதி கொண்ட 104 உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின.

1992 இல் ரூ. 19 இலட்சம் மத்திய வங்கிப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 31.7 இலட்சம் பெறுமதியான 5 உரிமைக் கோரல்கள் பெற்றுக் கொள்ளப் பட்டன. இவற்றில் ரூ. 2 இலட்சம் கொண்ட ஓர் உரிமைக் கோரல் தீர்க்கப்பட்டு ரூ. 6.0 இலட்சம் கொண்ட இன்னோர் கோரல் பிற்போடப்பட்டவேளையில் ரூ. 18 இலட்சம் கொண்ட 3 உரிமைக் கோரல்கள் சீர்தூக்கிப் பார்க்கப்படுகின்றன.

பே.கொ.க. திட்டத்தின்கீழ் 1,816 கடன் பெறுநர்களால் பொதுமக்களின் பேருந்துப் போக்குவரத்துத் தொகுதிக்கு மொத்தமாக 1,911 புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இத் திட்டத்தின் குறிப்பிடத்தக்க தன்மையாக 1,463 பேருந்துகளுக்கு வகைகூறிய 1,420 புதிய தனியார் பேருந்து உடமையாளர்களின் தோற்றம் விளங்கியது. ஏற்கெனவே இருக்கும் பேருந்து தொழிற்பாட்டாளர்களின் விரிவாக்கம் 448 பேருந்துகளைக் கொண்ட 396 கடன் பெறுநர்களுக்கு மட்டும்

அட்டவணை 2.7

**பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின் தொகுப்பு**

(பெறுமதி ப. இ. ரூபாய்களில்)

| விடயம் | | 1991 திசெம்பர் 31இல் உள்ளவாறு | | 1992 திசெம்பர் 31இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் | ... | 1511 | 347.94 | 1928 | 1,096.57 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் | ... | 1511 | 674.82(அ) | 1928 | 870.62(அ) |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் | ... | 2 | 0.96 | 9 | 4.78 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் | ... | 16 | 7.35 | 104 | 59.51 |
| **கோரல்கள்** | | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் | ... | | | 5 | 3.17(ஆ) |
| 3.2 மத்திய வங்கி பொறுப்பு | ... | | | | 1.94 |
| 3.3 தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரல்கள் | ... | | | | |
| 3.3.1 முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட | ... | | | 1 | 0.2 |
| 3.3.2 பகுதி தீர்ப்பனவு செய்யப்பட்ட | ... | | | 1 | 0.6 |
| 3.3.3 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | ... | | | | |
| 3.3.4 பின்போடப்பட்ட கோரல்கள் (ஈ) | ... | | | 3 | 1.82 |
| 3.3.5 முடிவுறா கோரல்கள் (ஈ) | ... | | | | |
| 4.1 வெளிநின்ற கடன்கள் | ... | 1493 | 679.36(இ) | 1810 | 903.5(இ) |
| 4.2 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு | ... | 1493 | 541.17(அ) | 1810 | 716.79(அ) |
| 5. சேகரிக்கப்பட்ட கட்டணம் | ... | | 3.08 | | 8.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 16 இலட்சத்திற்கு உட்பட்டு ரூ. 20 இலட்சம், ரூ. 20 இலட்சம், ரூ. 30 இலட்சம், ரூ. 30 இலட்சம், ரூ 40 இலட்சம் என்பவற்றுக்கு முறையே 80%, 60%, 40%.

(ஆ) அவற்றிற்கான வட்டி உட்பட செலுத்தத் தவறிய தொகை.

(இ) மீட்கப்பட்ட தவணைப் பணங்கள் நீங்கலாக.

(ஈ) 4.1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வகை கூறியது. மொத்தமாக 1,031 கடன் பெறுநர்கள் அல்லது மொத்தக் கடன் பெற்றோரின் 56 சதவீதத்தினர் பயணிகள் போக்குவரத்தில் ஒரு பேருந்தினை மட்டும் கொண்டிருந்த உடைமையாளர்களாக விளங்கினர். இவ்வாறு இத் திட்டம் தனியார் பேருந்து உடைமையைப் பரந்தளவாக்கியும், அதிகரித்தும் பங்களிப்புச் செய்தது.

இத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் 1992 திசெம்பர் 31 இல் ரூ. 89 இலட்சமாக விளங்கியது.

**வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் (வீஉகுவபுநிதி) கட்டம் IV**

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 106 (1) இன் நியதிகளின்படி, நகர மற்றும் கிராமப் பகுதிசளில் குறைந்த வருமானமுள்ள வீட்டுடமையாளர்களின் புகலிட நிலைமைகளை முன்னேற்றுவதற்கு வீஉகுவபு நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டம் iv இன் நிருவாகத்திற்காக 1992 யூலையில் மத்திய வங்கி ஓர் மீள் நிதியிடல் திட்டத்தை நிறுவியது. இத்திட்டத்தின் கீழ் வங்கி உச்சக் கடன் வழங்குநராகத் தொழிற்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் அரச வீடமைப்புக் கடன் உத்தரவாத நிகழ்ச்சித் திட்டம் கட்டம் iv இன் கீழ் இலங்கை அரசிற்குக் கடனாக வழங்கப்பட்ட நிதியங்களிலிருந்து இலங்கை மத்திய வங்கியால் மீள் நிதியிடல் வசதிகள் வழங்கப்பட்டன. வீஉகுவபுநி கட்டம் iv நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் உடன்படிக்கை செய்து கொண்ட துணை உச்ச கடன் வழங்குநர்களாகவும் (துஉகவ) நேரடி முதன்மைக் கடன் வழங்குநர்களாகவும் (நேமுகவ) பெயரிடப்பட்ட பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்கு (பகொநி) இந் நிதியங்கள் கிடைக்கச் செய்யப்பட்டன. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வரையறுக்கப்பட்ட செலான் வங்கி என்பன 1992 இன் இறுதியில் மத்திய வங்கியுடன் உடன்படிக்கை செய்துகொண்டன.

துணை உச்சக் கடன் வழங்குநர்கள், இந் நிதியங்களைத் தகுதியான வீட்டுடைமையாளருக்கு நேரடியாகவோ அல்லது கூட்டுறவு கிராமிய வங்கிகள், சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம், உண்மைச் சொத்து அபிவிருத்திக் கூட்டு நிலையங்கள் அல்லது காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் போன்ற முதன்மைக் கடன் வழங்குநர்களூடாகவோ கடன் வழங்குமாறு கேட்கப்படுகின்றார்கள். இதற்காக முதன்மைக் கடன் வழங்குநர்கள் இக் கடன்களைத் தகுதியான வீட்டுடைமையாளருக்கு வழங்குமாறு கேட்கப்படுகின்றனர். 1992 இல் தகுதித் தகைமையின்கீழ் மாதமொன்றிற்கு ரூ. 2,960 வருமானம் பெறும் கிராமிய வீட்டுடைமையாளரும், மாதமொன்றிற்கு ரூ. 3,700 வருமானம் பெறும் நகர வீட்டுடைமையாளர்களும் இத் திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்காக காணி கொள்வனவிற்கும், புதிய வீட்டை அமைப்பதற்கும், ஏற்கெனவே இருக்கும் வீடுகளைப் பெருப்பிப்பதற்கும் முன்னேற்றுவதற்கும், ஏற்கெனவே இருக்கும் வீடுகளைப் புதுப்பிப்பதற்கும், வீட்டின் உள்ளார்ந்த அமைப்புக்களுக்காகவும் நிதியங்களைக் கடனாகப்பெற உரித்துடையோராவர்.

இத் திட்டத்தின்கீழ் மீள் நிதியிடலின் பகிர்ந்தளிப்புக்கள் 1992 ஒற்றோபர் நடுப் பகுதியில் ஆரம்பித்ததுடன் 1992 திசெம்பர் இறுதியில் ரூ. 270 இலட்சம் கொண்ட 4,273 வீடமைப்புக் கடன்களுக்காக மீள் நிதியிடல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**அட்டவணை 2.8**

**மீள்நிதியிடல் ஒப்புதல்களினதும் பகிர்ந்தளிப்புகளினதும் தொகுப்பு 1992 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

(பெறுமதி ப.இ. ரூபாய்களில்)

| துணை உச்சக் கடன் வழங்குநர் (பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள்) | ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்கள் | | பகிர்ந்தளிக்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்கள் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1. இலங்கை வங்கி ... | 4,158 | 24.50 | 2,990 | 7.60 |
| 2. வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி... | 68 | 1.20 | — | — |
| 3. அரச ஈட்டு முதலீட்டு வங்கி ... | 47 | 1.70 | — | — |
| 4. மக்கள் வங்கி ... | — | — | — | — |
| 5. வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ... | — | — | — | — |
| மொத்தம் ... | 4,273 | 27.40 | 2,990 | 7.60 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**சிறிய நடுத்தரக் கைத்தொழில் மற்றும் பெருந்துக் கொள்வனவுக் கடன் உத்தரவாத நிதிய மூலவளங்களின் முதலீடு**

முதலாந்தர, இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தைகளில் 1988 யூலையில் ஆரம்பித்த சிறிய, நடுத்தரக் கைத்தொழில் மற்றும் பெருந்துக் கொள் வனவுக் கடன் உத்தரவாத மூலவளங்களின் முதலீடு 1992 இலும் தொடர்ந்தது. 1992 இறுதியில் இம் முதலீடுகளும் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணங்களும் ரூ. 4,250 இலட்சம் ஆக விளங்கின. இவ்வாண்டில் இம் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி வருவாய் ரூ. 489 இலட்சமாக விளங்கியது.

**தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

அபிவிருத்தி நிதித் திணைக்களம் இவ்வாண்டில் மூன்று தொழில் முயற்சி யாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. பள்ளிக்கூடங்களி லிருந்து விலகுவோரிடையேயும் சனசக்தி நன்மை பெறுவோரிடையேயும் சுய தொழில் வாய்ப்புக்கள் பற்றிய அறிவினை ஊட்டும் நோக்குடன் புத்தளம் மாவட்டத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் 110 பங்குபெறுநர்கள் பங்குபற்றினர். முகாமைத்துவம் மற்றும் தொழில் நுட்பத்தின் தரம் உயர்த்தல் மீதான இரண்டு செயற்றிட்டங்கள் அநுராதபுரத்திலும், மகியங்கனையிலும் நடாத்தப்பட்டன. பங்குபற்றுநர்களாக அநுராதபுரம் மாவட்டத்தில் இருக்கும் கைத்தொழிற்சாலைகளிலிருந்து 60 தைக்கப்பட்ட ஆடைக் கைத்தொழிலாளர் களும் மகியங்கனை மாவட்டத்திலிருந்து சிறு பொறியியற் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் 45 கைத்தொழிலாளர்களும் விளங்கினர். இந் நிகழ்ச்சித் திட்டங் கள் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் புத்தளம், அநுராத புரம், பதுளை மாவட்டங்களில் தொழிற்படும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் உதவியுடன் நடாத்தப்பட்டன.

## செயற்றிட்டங்களின் பின்தொடர்வும் பரிசோதனையும்

1992 சிநகை திட்டத்தின்கீழ் தேவையானபோது சரியான நடவடிக்கைக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டும் பகொநி ஆல் ஒப்படைக்கப்பட்ட கோரல் களைத் தீர்க்கும் பொருட்டும் 230 செயற்றிட்டங்கள் பரிசோதிக்கப்பட்டன. இச் செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை கொழும்பு, காலி, புத்தளம், கம்பகா அநுராதபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களில் அமைந்திருந்தன.

## கிராமியக் கொடுகடன்

வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட பின்வரும் கொடுகடன் திட்டங்களை நிறைவேற்றுகின்ற முகவராக வங்கி 1992 இலும் தொடர்ந்து பங்காற்றியது.

(1) வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப் பட்ட கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(2) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கிருண்டி ஓயா நீர்ப் பாசனக் குடியேற்றச் செயற்றிட்டம் (கட்டம் 11).

(3) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(4) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மத்திய நில நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(5) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வேளாண்மைப் புத் தாக்கச் செயற்றிட்டம்.

(6) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(7) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

கொடுகடன் கூறான சிஎஉ 15.5 இலட்சத்தினைக் கொண்டிருக்கும் கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் அதன் தொழிற்பாடுகளை 1989 ஒற்றோபர் 15 இல் தொடங்கியதுடன் 1993 யூன் 30 இல் முற்றுப்பெறச் செய்வதற்கும் அட்டவணையிடப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள் 100 சதவீத மீள்நிதியிடல் வசதிகளுக்கு உரித்துடையனவாகும். நடுத்தரகால வேளாண்மை மற்றும் கைத் தொழில் கடன்களைப் பொறுத்தவரையில் 75 சதவீதம் மீள் நிதியிடல் நிதியங் களிலிருந்து வழங்கப்பட்ட வேளையில் மிகுதி 25 சதவீதம் இலங்கை மத்திய வங்கியின் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டது. பயிர்ச்செய்கைக் கடன்களைப் பொறுத்த வரையில் 50 சதவீதம் மீள் நிதியிடல் செயற்றிட்ட நிதியங்களிலிருந்து வழங்கப்பட்ட வேளையில் மிகுதி 50 சதவீதமும் இலங்கை மத்திய வங்கியின் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டது.

செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள வேளாண்மையாளர்களுக்குப் பயிற்சி, ஆதரவுப் பணிகள் மற்றும் இரு சில்லு உழு பொறிகளைக் கொள்வனவு செய்வதற்கான நிதியினை வழங்கும் கிருண்டி ஓயா நீர்ப்பாசனக் குடியேற்றச் செயற்றிட்டமானது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அம்பாந்தோட்டைப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றைப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாகக் கொண்டிருக்கின்றது. இச்செயற்றிட்டத்தின் கீழான மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் 1992 திசெம்பர் 31 இல் ரூ. 718 இலட்சங்களாக அமைந்தவேளையில் 1992 இன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 158 இலட்சமாக அமைந்திருந்தன.

1992 இல் நான்காவது ஆண்டாகத் தொழிற்பாட்டைக் கொண்டிருந்த சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்காக கள அபிவிருத்தி, நாற்று மேடை அபிவிருத்தி, தொழிற்சாலைப் புத்தாக்கம் போன்றவற்றிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பொருட்டு மத்திய வங்கி ரூ. 232 இலட்சங் கொண்ட மீள் நிதியிடல் தொகையை பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. 1992 இறுதியில் மேலேயுள்ள கொடுகடன் திட்டத்தின் கீழ் வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த மீள் நிதியிடல் ரூ. 434 இலட்சமாக விளங்கியது. 1992 இல் இத்திட்டத்தின் கீழ் இரு புதிய நிறுவனங்களான பதுளை மற்றும் இரத்தினபுரி பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக உள்ளடக்கப்பட்டன.

பதுளை, கண்டி, மாத்தளை மற்றும் மொனராகலை மாவட்டங்களினது நீண்ட காலப் பயிர்களின் குறிப்பாகச் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் உணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதனையும் வர்த்தக மயமாக்கலை மேம்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி வேளாண்மையாளர்களுக்குக் கொடுகடன் வசதிகளை வழங்கும் விதத்தில் நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கொடுகடன் திட்டத்தில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி மற்றும் கண்டி, கேகாலை, மொனராகலை, பதுளை, மாத்தளை மாவட்டங்களின் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பன விளங்கின. இச்செயற்றிட்டத்தின் கீழான கொடுகடன் வசதிகள் நீண்ட காலப் பயிர்களின் பண்ணைப் பயிர் அபிவிருத்தி, தனியார் நாற்றுமேடை அபிவிருத்தி, பண்ணையில் அறுவடைக்குப் பிந்திய கையாளலும் செயல் முறை நடவடிக்கைகளும் என்பனவற்றிற்கு வழங்கப்பட்டன. 1992 இறுதியில் ரூ. 172 இலட்சம் மத்திய வங்கியினா[illegible] நிதியிடலாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ. 116 இலட்சமாகும்.

வேலை வாய்ப்பு, வருவாய் உருவாக்கம் என்பனவற்றை மீண்டும் அடைவதனையும் மேலும் விரிவாக்குவதனையும் நோக்கமாகக் கொண்டு பண்ணை உற்பத்திகளை நிறைவு செய்து ஊக்கமளிக்கக் கூடிய வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, வேளாண்மைசார் வியாபாரத்துறை போன்றவற்றினை மீளாற்றல்படுத்துவதனூடாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களையும் சொத்துக்களையும் புத்தாக்கம் செய்வதற்கான செயற்றிட்டத்தின் மூலதனத் தேவைகளை நிதியிடுவதற்கான கடன்களை ஏற்பாடு செய்வதே வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இச்செயற்றிட்டம் வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு,

வவுனியா, கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய எட்டு மாவட்டங்களையும் எல்லை மாவட்டங்களான அநுராதபுரம், அம்பாந்தோட்டை மொனராகலை,பொலனறுவை, புத்தளம் ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறினை நடைமுறைப்படுத்துவதற்காக 1991 ஒற்றோபரில் வங்கியின் கிராமிய கொடுகடன் திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்ட செயற்றிட்ட முகாமைப் பிரிவு, 1992 காலப் பகுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட 626 துணைக் கடன்கள் தொடர்பாக வங்கிகளுக்கு ரூ. 315 இலட்சத்தினை மீள் நிதியிடல் வசதியாக வழங்கியது. இப்பிரிவு, இத்திட்டம் பற்றிய அறிவாற்றலினைக் கடன் பெறுநர்களிடையே ஏற்படுத்துவதற்கு உறுதியான பிரசாரங்களை மேற்கொண்டதுடன் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலை விரிவுபடுத்தும் நோக்குடன் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள வங்கி அலுவலர்களின் நன்மைக்காகக் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியுடன் இணைந்து ஏழு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறுக்கான உச்ச நடைமுறைப்படுத்தல் முகவராக இலங்கை மத்திய வங்கி விளங்கியது.சார்லி மவுண்ட் கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள சிறிய/நடுத்தர அளவுக் கைத்தொழில் முயற்சிகளுக்கும் தென் மாகாணத்திலுள்ள சிறிய/நடுத்தர அளவுக் கிராமியத் தொழில் முயற்சிகளுக்கும் நிதியிடுவதற்காக இச்செயற்றிட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடல் வசதிகளை வழங்கும்.

வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை 1992/1998 வரையான 7 ஆண்டு காலப் பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ஐ. அ. டொலர் 300 இலட்சங் கொண்ட கடனைப் பெறுவதற்காக இலங்கை அரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் கடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. செயற்றிட்டத்தின் ஐ.அ. டொலர் 27 இலட்சங் கொண்ட கொடுகடன் கூறிற்கான உச்ச நடைமுறைப்படுத்தல் முகவராக இலங்கை மத்திய வங்கி விளங்குகிறது. கொடுகடன் திட்டத்தின்கீழ் கிணறு வெட்டுதல், ஏற்றல் நீர்ப்பாசனத் திட்டங்கள் கிராமிய மகளிரால் மேற்கொள்ளப்படும் சிறிய அளவிலான சுயவேலைவாய்ப்புச் செயற்றிட்டங்கள் என்பனவற்றிற்கு மீள் நிதியிடல் வழங்கப்படும். கொடுகடன் பகிர்ந்தளிப்பு இன்னமும் தொடங்கவில்லை.

உள்நாட்டு உண்டியல் திட்டம் 1992 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் தொழிற்படுத்தப்பட்டதுடன் ரூ. 8 இலட்சம் கொண்ட ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் எல்லைக்கும் ஒப்புதலளித்ததன் மூலம் அத்தகைய எல்லைகளின் மொத்த எண்ணிக்கை 30 ஆகியது. தேயிலைத் துறையிலுள்ள கொழுந்து இலைகளை நிரம்பல் செய்வோர், வாங்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலை உடைமையாளர் ஆகியோருக்கு வர்த்தக வங்கிகளினூடாக உதவும் வகையில் 1989 இல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நுவரெலியாப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினூடாகப் பால் வாங்குவோர், விற்போருக்கும் நிதி உதவி வழங்கும் வகையில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

சேமிப்புக்களைத் திரட்டல், கடன்களை வழிப்படுத்தல், மேம்பாட்டுப் பணிகளை விரிவாக்கல் என்பனவற்றின் மூலம் பி.கி.அ. வங்கிகள் கிராமியப் பொருளாதார அபிவிருத்தியினைத் தொடர்ந்து மேம்படுத்தின.

### பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி வலையமைப்பின் விரிவாக்கம்

பெப்புருவரியில் அம்பாறை பி.கி.அ. வங்கி நிறுவப்பட்டதுடன் 1992 இறுதியில் தொழிற்பாட்டில் இருந்த பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை 16 இற்கு அதிகரித்த வேளையில் கிளைகளின் எண்ணிக்கை 1991 இன் மொத்தம் 124 இலிருந்து 1992 இன் இறுதியில் மொத்தம் 156 இற்கு கணிசமாக விரிவடைந்தது.

அட்டவணை 2.9

**பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிளை விரிவாக்கம்**

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவிய திகதி | தலைமை அலுவலகம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | | | | | | 1992 இறுதியில் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | |
| 1. களுத்துறை | 85.07.13 | புளத்சிங்கள | 4 | 3 | 4 | 1 | — | — | 1 | 2 | 15 |
| 2. மாத்தறை | 85.07.28 | மாத்தறை | 5 | 2 | — | 1 | — | — | — | 4 | 12 |
| 3. குருநாகல் | 85.08.10 | குளியாப்பிட்டி | 6 | 4 | 2 | 1 | 1 | 1 | — | 2 | 17 |
| 4. அநுராதபுரம் | 85.08.12 | அநுராதபுரம் | 2 | 4 | 1 | — | — | — | 3 | 1 | 11 |
| 5. அம்பாந்தோட்டை | 86.12.13 | அம்பாந்தோட்டை | | 2 | 2 | 2 | — | 1 | — | 1 | 8 |
| 6. கேகாலை | 87.02.08 | கேகாலை | | | 8 | 1 | 2 | –1†1 | — | 1 | 12 |
| 7. புத்தளம் | 87.07.11 | சிலாபம் | | | 5 | 1 | — | 2 | 1 | 1 | 10 |
| 8. காலி | 87.08.17 | எல்பிட்டிய | | | 1 | 7 | 1 | — | — | 3 | 12 |
| 9. மகாநுவரை | 87.10.03 | மகாநுவர | | | 6 | 3 | — | 2 | 1 | 2 | 13 |
| 10. நுவரெலியா | 88.10.10 | நுவரெலியர | | | | 1 | 3 | 2 | — | 2 | 8 |
| 11. மொனராகலை | 88.10.11 | புத்தளை | | | | 1 | 2 | 1 | 2 | — | 6 |
| 12. பதுளை | 90.10.13 | பதுளை | | | | | | 4 | 2 | 3 | 9 |
| 13. பொலநறுவை | 91.05.17 | பொலநறுவை | | | | | | | 4 | 2 | 6 |
| 14. மாத்தளை | 91.06.21 | மாத்தளை | | | | | | | 5 | 1 | 6 |
| 15. இரத்தினபுரி | 91.09.30 | இரத்தினபுரி | | | | | | | 4 | 2 | 6 |
| 16. அம்பாறை | 92.02.24 | அம்பாறை | | | | | | | | 5 | 5 |
| மொத்தம் | | | 17 | 15 | 29 | 19 | 9 | 12 | 23 | 32 | 156 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வைப்புத் திரட்டல்

1992 இல் சேமிப்புக்களைத் திரட்டுவதில் பி.கி.அ. வங்கிகள் கணிசமான முன்னேற்றத்தைப் பதிவு செய்தன. 1992 இன் இறுதியில் பி.கி.அ. வங்கிகளின் வைப்புக்கள் ரூ. 6,660 இலட்சமாக விளங்கியதோடு இவற்றில் நிலையான வைப்புக்கள் 12 சதவீதத்தினையும் சேமிப்பு வைப்புக்கள் 88 சதவீதத்தினையும் கொண்டிருந்தன. 1992 இல் சேமிப்புக் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 570,360 ஆகவும் நிலையான வைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 3,365 ஆகவும் விளங்கின. 1992 இல் பி.கி.அ. வங்கிகளில் வைப்புக்களின் பெறுமதி 1991 இனைவிட 52 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்த வேளையில் 1992 இல் வைப்புக் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 573,725 ஆக விளங்கி 35 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இந்த அதிகரிப்புக்கு வங்கித் தொழிலைக் குறைவாகக் கொண்ட அல்லது வங்கித் தொழிலையே கொண்டிராத தொலைதூரப் பிரதேசங்களுக்குக் கிளை வலையமைப்பு விரிவாக்கப்பட்டமை, கிராமியப் பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகரித்தமை, புதிய சேமிப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை, கட்டாய சேமிப்புத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டமை, சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பதற்காகக் கிராமிய மட்டத்திலான கூட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை என்பன முதன்மைக் காரணங்களாக அமைந்தன.

1991 இல் ரூ. 920 ஆகக் காணப்பட்ட சேமிப்புக் கணக்கொன்றின் சராசரி அளவு 1992 இல் கிட்டத்தட்ட 12 சதவீதத்தினால் ரூ. 1,030 இற்கு அதிகரித்த வேளையில், நிலையான வைப்பொன்றின் சராசரிப் பெறுமதி 1991 இன் ரூ. 18,929 இலிருந்து 1992 இல் ரூ. 23,661 இற்கு 25 சதவீதத்தினால் அதிகரித்தது.

## கடன் தொழிற்பாடுகள்

1991 இல் 60,315 கடன்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூ. 5,950 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் பி.கி.அ. வங்கிகள் 71,559 கடன்கள் தொடர்பாக மொத்தம் ரூ. 7,030 இலட்சத்தினை வழங்கின.

1992 இல் பி.கி.அ. வங்கிகளினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் சிறு கைத்தொழில்கள், வர்த்தகம், வாணிபம் என்பனவற்றிற்காக வழங்கப்பட்ட கடன்களின் சதவீதப் பங்கு 1991 இன் 23 சதவீதத்திலிருந்து 1992 இல் 28 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் வேளாண்மையின் பங்கு 46 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அடகு வைத்தல் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள் முன்னைய ஆண்டைவிட 96 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 3,020 இலட்சமாக விளங்கின. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 118,978 ஆக விளங்கி முன்னைய ஆண்டினைப் போன்றதொரு அதிகரிப்பைப் பதிவு செய்தது.

நடைமுறை ஆண்டின் இறுதியில் அனைத்து பி.கி.அ. வங்கிகளினதும் வெளிநின்ற கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ. 11,160 இலட்சம் ஆக விளங்கி 1991 இறுதியின் மட்டத்தினைவிடக் கிட்டத்தட்ட 38 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மொத்தத் தொகையில் வேளாண்மைக்காக வழங்கப்பட்ட கடன்கள் 40 சதவீதம்

கொண்ட மிகப் பெரிய பங்கிற்கு வகை கூறிய வேளையில் வர்த்தக வாணிப நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் 13 சதவீதமாகவும் சிறு கைத்தொழில்களுக்கான கடன்கள் 10 சதவீதமாகவும் விளங்கின. வேளாண்மைக் கடன்களின் பங்கு கடந்த சில ஆண்டுகளாக வீழ்ச்சியுறும் போக்கினைக் காட்டியுள்ளதோடு 1990 இன் 52 சதவீதத்திலிருந்து 1992 இல் 40 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

**ஏனைய நடவடிக்கைகள்**

1992 இல் பி.கி.அ. வங்கிகள் குழந்தைகளுக்கான சிறப்பு சேமிப்புத் திட்டங்களைத் தொடக்கி வைத்ததோடு சேமிப்புக்களை மேம்படுத்தும் தமது முயற்சியில் சேமிப்புக் கணக்குகளுக்கு மேலதிக வசதிகளையும் வழங்கின.

வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவும் பொருட்டு பி.கி.அ. வங்கிகள் சிறப்புக் கடன் திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தின. இத் திட்டத்தின்கீழ் பி.கி.அ. வங்கிகள் சுயதொழில் முயற்சிகளுக்காக இலகு நியதிகளில் கடன் வசதிகளை வழங்கின. இச் செயற்றிட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்தும் பொருட்டு நன்மை பெறுநர்களைப் பயிற்றுவித்தல் போன்ற ஏனைய வசதிகளையும் பி.கி.அ. வங்கிகள் வழங்கின.

கிராமிய உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப் படுத்துவதில் இடர்களை எதிர்நோக்குகின்றமையால் சந்தைப்படுத்தல் உதவிகளை வழங்குவதிலும் பி.கி.அ. வங்கிகள் முயற்சிகளை மேற்கொண்டன. குருநாகல், பொலநறுவை, கண்டி, மொனராகலை, மாத்தளை, அம்பாந்தோட்டை அநுராதபுரம், பதுளை மற்றும் புத்தளம் பி.கி.அ. வங்கிகள் வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் திட்டத்தின்கீழ் ரூ. 200 இலட்சம் பெறுமதியுடைய நெல், மிளகாய், வெங்காயம் மற்றும் பயறு என்பனவற்றைக் கொள்வனவு செய்தன. விலைகள் முன்னேற்றமடையும் வரையில் இவ்வுற்பத்திப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் உற்பத்தியாளர்கள் உயர்ந்த விலைகளைப் பெறுவதனையும் இது இயலச் செய்தது.

**சிறு வேளாண்மையாளர்கள் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்**

வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் (வே அ.ப. நிலையம்) மற்றும் கனடிய பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மை (க.ப.அ. முகவராண்மை) என்பனவற்றினால் நிதியிடப்பட்ட சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் நிறைவேற்று முகவராண்மையாக மத்திய வங்கி விளங்குகின்றது. வே.அ.ப. நிதியம் இச் செயற்றிட்டத்திற்காக சிஎஉ 48.5 இலட்சம் கொண்ட கடனையும் க.ப.அ. முகவராண்மை சிஎஉ 47 இலட்சம் கொண்ட கொடையையும் வழங்குகின்றன. இத்தொகையானது செயற்றிட்டத்தின் மொத்தச் செலவில் 74 சதவீதமாகும். இச் செயற்றிட்டத்திற்கான அரசின் உதவு தொகை மொத்தச் செயற்றிட்டச் செலவில் 23 சதவீதமாவதோடு எஞ்சிய 3 சதவீதம் நன்மை பெறும் சேமிப்புக்களிலிருந்து வழங்கப்படும்.

1992 இல் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் இனங் காணப்பட்ட கிராமிய வறிய மக்களுக்கே கொடுகடன் வழிப்படுத்தப்பட்டது. கண்டி, புத்தளம், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களின் நன்மை பெறுநர்களுக்கே கடன்கள்

வழங்கப்பட்டன. 1992 இல் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி 1991 இனைவிட 91 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டின் 4,676 நன்மை பெறுநர்களுக்கான ரூ. 270 இலட்சம் கொண்ட கடன் தொகை யுடன் ஒப்பிடுகையில் 7,146 நன்மை பெறுநர்கள் தொடர்பாக ரூ. 520 இலட்சம் கொண்ட கடன்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது.

12,518 நன்மை பெறுநர்கள் தொடர்பாக 1990 இலிருந்து 1992 வரையி லான காலப் பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூ. 830 இலட்சமாக விளங்கியது. இக்காலப் பகுதியில் நன்மை பெறுநர்களின் சேமிப்புக்கள் ரூ. 100 இலட்சமாக விளங்கின. இச் செயற்றிட்டத்தின் குறிப்பிடத்தக்க பண்பு 92 சதவீத சராசரி கடன் மீட்பு வீதமாகும். மேலும் இச்செயற்றிட்டத்தின் முக்கிய பண்பொன்றாகப் பயன்பெறுநர்களின் மொத்த எண்ணிக்கையில் 58 சத வீதத்திற்குப் பெண்கள் வகைகூறியமை விளங்கியது.

1992 இன் இறுதியில் இச் செயற்றிட்டம் 1,006 கிராமங்களில் அளவீடு களை முற்றுப்பெறச் செய்தது. 2,936 குழுக்கள் உருவாக்கப்பட்டு செயற் றிட்டத்தில் பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்யப்பட்ட நன்மை பெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 17,923 ஆகும்.

நன்மை பெறுநர்களை இனங்காணல்,சிறு குழுக்களை உருவாக்கல், சேமிப்புக் களைத் திரட்டல், கடன் வழங்கல் என்பனவற்றிற்கு மேலதிகமாக, பயிற்சி மற்றும் தொழில் நுட்ப உதவி போன்ற ஏனைய உதவிப் பணிகளும் நன்மை பெறுநர்களுக்கு வழங்கப்பட்டன. பங்கேற்கும் முகவராண்மைகள், செயற்றிட்ட மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பி.கி.அ. வங்கிகள் என்பனவற்றினூடாக மத்திய வங்கியினால் இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

மத்திய வங்கியின் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி 1992 இல் 1,901 ஆட்களுக்கு 67 பயிற்சி நெறிகளை நடாத்தியது. இது 1991 இல் 2,385 ஆட்சளுக்கு நடாத்தப்பட்ட 97 பயிற்சி நெறிகளுடன் ஒப்பிடத் தக்கது.

1992 இல் நடாத்தப்பட்ட 67 பயிற்சி நெறிகளில் 29 மட்டுமே கல்லூரியில் நடாத்தப்பட்டதுடன் எஞ்சிய 38 நெறிகளும் வெளியிடங்களில் நடாத்தப்பட் டன. வெளியிடங்களில் நடாத்தப்பட்ட அப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய 1,104 ஆட்களில் அநேகமானோர் சிறு அளவு தொழில் முயற்சியாளர்களும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால்(பி.கி.அ.வ.) வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளை ஏற்கனவே பெற்றோ அல்லது பி.கி.அ. வங்கியால் கிடைக்கப்பெறும் நிறுவன ரீதியான கொடுகடன் வசதிகளைப் பெறுவதனை எதிர்பார்த்தோ சுய வேலையில் ஈடுபடும் ஆட்களையும் உள்ளடக்கியுள்ளது. 1992 இல் மொத்தமாக 797 பங்குபற்றுநர்களில் 201 ஆட்கள் மத்திய வங்கியிலிருந்தும் 138 ஆட்கள் வர்த்தக வங்கிகளிலிருந்தும், 458 ஆட்கள் பி.கி.அ. வங்கிகளிலிருந்தும் கல்லூரி யால் நடாத்தப்பட்ட 29 பயிற்சி நெறிகளில் பங்குபற்றினர்.

1992 இல் கி.வ.அ.ப. கல்லூரியால் வழங்கப்பட்ட பயிற்சியின் முக்கிய துறைகளாகக் கிராமிய வங்கித்தொழில், அபிவிருத்தி சார்ந்த செயற்றிட்டங்கள், வர்த்தக வங்கித்தொழில், பன்னாட்டு வர்த்தகம், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், வாடகைக் கொள்வனவும் குத்தகை நிதியிடலும், முகாமைத்துவம், பயிற்சியாளர்களின் பயிற்சி, கணனிப் பயிற்சி, சிறு தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்தி என்பன விளங்கின. 1992 இற்காக அட்டவணையிடப்பட்ட நெறிகளுக்குப் புறம்பாக வேண்டுகோளின்பேரில், (அ) மத்திய வங்கியை நிறைவேற்று முகவராகக் கொண்ட சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம். (ஆ) வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டம். (இ) மத்திய நில, நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம், ஆகியவற்றைச் சேர்ந்த வெளிக்கள மட்டத்திலுள்ள அலுவலர்களின் நன்மைகருதி கி.வ.அ.ப. கல்லூரி பல சிறப்புப் பயிற்சி நெறிகளை நடாத்தியது.

கி.வ.அ.ப. கல்லூரி வினைத்திறன் தடைகாண் பரீட்சையிலிருந்து விலக்குப் பெறத் தகுதியுடைய மத்திய வங்கி அலுவலர்களின் நன்மைக்காக ஓர் ஆற்றுப்படுத்தும் நெறியையும், 'மனித வளங்கள் அபிவிருத்தி' மீதான 11 ஆவது வருடாந்த விரிவுரையையும் நடாத்தியதுடன் ஆங்கில மொழி அறிவு முன்னேற்றங்கள் தேவைப்படுவோருக்கு உதவுவதற்கு உரிய காலத்தில் கல்லூரியின் ஆங்கிலமொழி சுயகற்கை ஆய்வுகூடம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான ஆரம்ப ஒழுங்குகளையும் மேற்கொண்டது.

## ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியச் சட்ட நியதிகளின்படி உதவுதொகைகள், தண்டப் பணங்கள் நிதியத்தின் பண முதலீட்டிலிருந்தான வருவாய் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொறுப்பும் பதிவு செய்யப்பட்ட தொழில் தருநர்களினதும் நிதியத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் கணக்குகளைச் சரியாகப் பேணுதல், உறுப்பினர்களின் மீளளிப்பு நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவும் மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியச் சட்ட ஏற்பாடுகளின் நிருவாகம், நடைமுறைப்படுத்தல் என்பவற்றைக் கவனிக்கும் தொழிற்றிணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவின் நெருங்கிய ஒத்துழைப்புடன் மத்திய வங்கியின் ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தினால் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### உதவு தொகைகள்

நிதியத்தினால் பெறப்பட்ட உதவுதொகை 1991 இன் ரூ. 44,213 இலட்சத்திற்கெதிராக 1992 இல் ரூ. 52,945 இலட்சமாக விளங்கியது. இது முந்திய ஆண்டில் பெறப்பட்ட உதவு தொகைகளின் மட்டத்தினைவிட ரூ. 8,732 இலட்சம் அல்லது 19.7 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது.

### உறுப்பினர்களின் நிலுவைகள்

ஆய்விற்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கீடு செய்யப்படுமுன் 1992 திசெம்பர் 31 ஆம் நாளில் உள்ளவாறான உறுப்பினர்களின் நிலுவைகள் ரூ. 457,906 இலட்சமாக அமைந்து 1991 இனைவிட ரூ. 73,281 இலட்சம் அல்லது 19 சதவீதம் கூடுதலாக விளங்கியது.

**முதலீடுகள்**

ஆய்விற்குரிய ஆண்டில் நிதியம் அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள், வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணச் சந்தை என்பவற்றில் 1991 இன் ரூ. 160,144 இலட்சத்திற்கெதிராக ரூ. 267,424 இலட்சத்தினை முதலீடு செய்தது. இது 1991 இன் முதலீட்டு மட்டத்தினைவிட ரூ. 107,280 இலட்சம் அதிகமானதாகும். 1992 திசெம்பர் 31 ஆம் நாளன்று நிதியத்தின் மொத்த முதலீடுகள் ரூ. 548,347 இலட்சமாக விளங்கின. இது 1991 இன் மட்டத்தினை விட ரூ. 85,884 இலட்சம் அதிகமானதாகும்.

**முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்**

1989 இல் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின் நியதிகளின்படி ஊழியர் சேமநிதியத்திற்கு வருமானவரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த விலக்களிப்பு புறக்கீடு செய்யப்பட்டது. இதன்படி முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருவாய்களும் 1989 ஏப்பிறல் 1 இலிருந்து செயற்படும் வகையில் 10% தடுத்து வைத்தல் வரிக்கு உட்படுத்தப்பட்டன. 1992 இல் முதலீட்டு வருமானத்திலிருந்து தடுத்து வைத்தல் வரியாகக் கழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 6,905 இலட்சமாகும்.

1992 இல் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் 1991 இன் ரூ. 56,482 இலட்சத்திற்கெதிராக ரூ. 69,055 இலட்சமாக அமைந்து ரூ. 12,573 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது.

**மீளளிப்புக்கள்**

ஊழியர் சேமநிதிய நன்மைகளின் மீளளிப்பு மூலம் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1991 இன் ரூ. 13,442 இலட்சத்திற்கு எதிராக 1992 இல் ரூ. 22,651 இலட்சமாக விளங்கியது. இது ரூ. 9,209 இலட்சம் அல்லது 68.5சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. நன்மைகளின் மீளளிப்புக்களுக்காக 1991 இல் மீளச் செலுத்தப்பட்ட 38,910 கோரல்களுக்கு எதிராக ஆய்வுக்குரிய ஆண்டில் 49,864 கோரல்கள் செலுத்தப்பட்டன.

**உறுப்பினர்களின் நிலுவை மீதான வட்டி**

நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வருவாயிலிருந்து ஒவ்வொரு வருட இறுதியிலும் உறுப்பினர்களின் நிலுவை மீது வட்டி செலுத்தும்படி ஊழியர் சேமநிதியம் கேட்கப்பட்டுள்ளது. 1992 இறுதியில் உறுப்பினர்களின் நிலுவைகள்மீது செலுத்தப்படவேண்டிய ஆண்டுக்குரிய வட்டி வீதம் 11.5 சதவீதமாக விளங்கியது.

உறுப்பினர்களின் வரவில் ஆண்டு இறுதியில் நிலுவையாக நிற்கும் ஒன்று சேர்ந்த தொகையின்மீது வட்டி செலுத்தப்படுகின்றது. பணம் பெறப்பட்ட நாளைக் கணக்கில் எடுக்காது ஆண்டுக் காலத்தில் பெறப்பட்ட எல்லா உதவு தொகைகளும் ஆண்டு முழுவதற்குமான வட்டியைப் பெறத் தகுதியுடையனவாகும். உதாரணமாகத் திசெம்பர் மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகைகள்

அதே ஆண்டின் சனவரி மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகையைப் போன்று முழு வருடத்திற்குமான வட்டியைப் பெறும். எனவே தாக்கமுள்ள வட்டி வீதம் ஓரளவு கூடுதலானதாகும்.

**ஊழியர் சேமநிதிய வீடமைப்புக் கடன் திட்டம்**

குறிப்பிட்ட சில கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினர்கள் தமது வரவில் நிற்கும் நிலுவையின் மீது 75% வரையிலான தொகையைக் கடனாகப் பெறுவதற்கு இயலச் செய்யும் வகையில் ஊழியர் சேமநிதியச் சட்டம், 1988 இன் எண் 42 கொண்ட சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டது. இத் திட்டத்தில் பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களாவன வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, நாட்டில் பரவலாக உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவாகும்.

1992 திசெம்பர் 31 இறுதியில், ஊழியர் சேமநிதியத் திணைக்களம் நிலுவைகளை அத்தாட்சிப்படுத்துவதற்கான 45,588 விண்ணப்பங்களைச் செயற்படுத்தி சம்பந்தப்பட்ட தொழில் அலுவலகங்களுக்கு அனுப்பியிருந்தது.

நிதியத் தொழிற்பாடுகள் மீதான ஒப்பிடத்தக்க தரவு அட்டவணை 2.10 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.10

**ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1991—1992**

(ரூ. பத்து இலட்சங்களில்)

| | | 1991 | 1992 |
|---|---|---|---|
| 1. | பெறப்பட்ட உதவு தொகைகள் ... | 4,421.3 (அ) | 5,294.5(அ) |
| 2. | முதலீடுகள் ... | 16,014.4 (ஆ) | 26,742.4(ஆ) |
| 3. | முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் ... | 5,091.7 | 6,227.5 |
| 4. | மீளளிப்புக் கொடுப்பனவுகள் ... | 1,344.2 | 2,265.1 |
| 5. | மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 38,910 | 49,864 |
| 6. | வட்டி வீதம் (%) ... | 11.5 | 11.5 |
| 7. | உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கல் ... | 5,041.2 | 5,990.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.

(ஆ) அரச பிணைகளில் மீள் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சிப் பெறுகைகளையும் குறுங்கால முதலாந்தர திறைசேரி உண்டியல்களிலும் அழைப்புப் பணச் சந்தையிலும் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

## செலாவணிக் கட்டுப்பாடு

1992 இல் மத்திய வங்கியினால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் செயல் முறையில் பின்வரும் மாற்றங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

### 1. இறக்குமதிகள்

இறக்குமதியாளரின் தனிப்பட்ட பாவனைக்கான பொருட்களினதும் உதிரிப் பாகங்களினதும் இறக்குமதிக்கான உச்சவரம்பு கஏபெ கொழும்பு ஐ.அ. டொலர்கள் 1,000 இலிருந்து ஐ.அ. டொலர்கள் 2,000 இற்கு அல்லது அதற்குச் சமமான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திற்கு அதிகரிக்கப்பட்டதுடன் அதற்கான பணவனுப்பல்கள் இறக்குமதியாளருக்குத் தேவையான எந்த விதத்திலும் மேற்கொள்ளப்படுவதற்கும் அனுமதிக்கப்பட்டன. 1992 திசெம்பர் 24 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில், நாணயக் கடிதம் ஒன்றை நிறுவாமலே கொடுப்பனவுகள் மீதான ஆவணங்களின் நியதிகளில் வர்த்தக அடிப்படையில் கஏபெ கொழும்பு ஐ.அ. டொலர்கள் 5,000 அல்லது அதற்குச் சமமான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்குள் பொருட்களின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப் பட்டது.

மாற்றக்கூடிய நாணயத்தில் விலைப்பட்டியல் குறிப்பிடப்பட்டுள்ள, இந்தியாவுடனான வணிக மற்றும் கட்புலனாகா இறக்குமதி நடவடிக்கைகள் தொடர்பாக ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஏற்பாடுகளின் நியதிகளிலான உண்டியல்களின் தீர்ப்பனவுத் தேவைப்பாடு அகற்றப்பட்டுள்ளது.

ஆடம்பரப் பொருட்கள் தொடர்பாக நாணயக் கடிதங்களை நிறுவுதற்கான 100 சதவீத காசு வரையறைத் தேவைப்பாடு புறக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து எத்தகைய கட்டுப்பாடுகளுமின்றி அனைத்து இறக்குமதிகளையும் பணிகளுக்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும் வகையில் செலாவணி முன்மாற்று விற்பனைக்கு அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டது.

1992 நவெம்பர் 12 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் தீர்வை, மொத்த விற்பனவு வரிக் கொடுப்பனவுகள் போன்றவற்றினது கொடுப்பனவிற்கும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரின் உரிமத்துக்கும் உட்பட்டு ஒப்படைப்பு அடிப்படையில் தங்கத்தினை இறக்குமதி செய்வதற்கு இலங்கையின் அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. தயாரிப்பாளர்—சுங்கப் பிணையில்—களஞ்சியப்படுத்தி வைக்கும் திட்டத்தின்கீழ் தங்கத்தினை இறக்குமதி செய்யும் ஆபரணத் தயாரிப்பாளர்களிடமிருந்து தீர்வையின்றிக் கொள்வனவு செய்யப்பட்ட உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தங்க ஆபரணங்களை விற்பனை செய்வதற்கு கட்டுநாயக்கா கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. விமான நிலையத்தில் உள்ள தங்க விற்பனவு நிலையங்களில் விற்பனைக்காக ஆபரணங்களை வழங்க எண்ணியுள்ள ஆபரணத் தயாரிப்பாளர்கள் தமது தீர்வைக் கொடுப்பனவு இடர்ப்பாடுகளை நீக்கிக் கொள்வதற்காகத் தயாரிப்பாளர்—சுங்கப் பிணையில்—களஞ்சியப்படுத்தி வைக்கும் திட்டத்தின்கீழ் தங்கத்தினை இறக்குமதி செய்யலாம்.

1992 நவெம்பர் 12 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் வெளிநாட்டில் 6 மாதங்களுக்கு மேல் அல்லது 6 மாதங்களுக்குக் குறைவான காலப் பகுதிகளில் தங்கியிருந்து நாடு திரும்பும், இலங்கைக் கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போர் குறித்துரைக்கப்பட்ட நாணயத்தில், கட்டுநாயக்கா கொழும்பு சருவ தேச விமான நிலையத்தின் வருவோர் கூடத்தில் ஆளொருவர் ஆண்டொன்றுக்கு முறையே ஐ. அ. டொலர்கள் 5,000 வரையிலும் ஐ.அ. டொலர்கள் 1,000 வரையிலும் தங்கம், தங்க ஆபரணங்கள் என்பனவற்றைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டனர். தீர்வை செலுத்துவதன் மூலம் ஆளொருவர் ஆண்டொன்றிற்கு ஐ.அ. டொலர் 500 கொண்ட மேலுமொரு தொகைக்குத் தங்கத்தை/தங்க ஆபரணங்களைக் கொள்வனவு செய்யலாம்.

## 2. ஏற்றுமதிகள்

1992 சனவரி 08 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில், நாணயக் கடிதங்களின் மீதான அல்லது கொடுப்பனவு ஆவணங்களின் நியதிகளின் மீதான களஞ்சியப்படுத்தல் வர்த்தக நடவடிக்கைகளின் கீழ் பொருட்களின் மீள் ஏற்று மதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

1992 மாச்சு 17 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில், அன்பளிப்புக்கள் மற்றும் வர்த்தக மாதிரிகளின் ஏற்றுமதிக்கான உச்ச வரம்பு ரூ. 3,500 இலிருந்து ரூ. 10,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. 1992 மாச்சு 20 இலிருந்து பயனுறும் வகையில் இந்தியப் பிரதேச நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் பயணம் செய்யும் பெண் பயணிகளுக்குத் திருப்பிக் கொண்டுவரும் அடிப்படையில் தனிப் பட்ட ஆபரணங்களின் ஏற்றுமதி முறையே ரூ. 90,000 இலிருந்து ரூ. 100,000 இற்கும் ரூ. 90,000 இலிருந்து ரூ. 150,000 இற்கும் அதிகரிக்கப்பட்டது.

## 3. பயணம்

(அ) 1992 ஒகத்து 04 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் இந்தியப் பிரதேச நாடுகளுக்குப் பயணம் செய்யும் வதிவுடைய இலங்கையர்களுக்கு வழங்கப் பட்ட விடுமுறைச் செலாவணி ஒதுக்கீடு வயது வந்த ஒவ்வொரு ஆளுக்கும் ஐ.அ. டொலர்கள் 800 இற்கும் ஒவ்வொரு 12 வயதிற்குட்பட்ட பிள்ளைக்கும் ஐ.அ. டொலர்கள் 400 இற்கும் அதிகரிக்கப்பட்டது. ஏனைய நாடுகளுக்கான இத்தொகையானது வயது வந்தவர் ஒவ்வொருவருக்கும், 12 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் முறையே ஐ.அ. டொலர்கள் 7,500 உம் ஐ.அ. டொலர்கள் 3,750 உம் ஆகும். இரட்டைப் பிரசா உரிமையினைக் கொண்டுள்ள ஆனால் குறிப்பிடத்தக்க காலப் பகுதியொன்றில் (ஆறு மாதங் களுக்கு மேல்) இலங்கைக்கு வெளியேயிருந்து சிறிது காலம் தங்குவதற்காக இலங்கைக்குத் திரும்பியுள்ள இலங்கைப் பிரசைகளினால் செய்யப்படும் அடிப் படைச் செலாவணிக்கான விண்ணப்பங்கள் வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட் டுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(ஆ) 1992 ஒகத்து 04 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் இந்தியப் பிரதேச நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்குமான வணிகப் பயணங்களுக்கு, நாளொன்றுக்கான படிகள் 50 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. 1992 திசெம்பர் இறுதியில் பொதுக் கம்பனிகளின் தலைவர்/பணிப்பாளர்களுக்குக்

குறிப்பிடப்பட்ட பிரதேசங்களின் நாடுகளுக்காகப் பிரயோகிக்கப்பட்ட வீதங்களாவன ஐ.அ. டொலர்கள் 350 உம் ஐ.அ. டொலர்கள் 450 உம் ஆகும். ஏனைய கம்பனிகளின் ஊழியர்களுக்கான வணிகப் பயணப் படிகளும் அதிகரிக்கப்பட்டன.

**4. கல்வி**

1992 ஒகத்து 04 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில், ஆரம்ப இரண்டாந்தர, பட்டப்படிப்பு, தொழிற்றுறை மற்றும் தொழில்நுட்ப கல்வி சம்பந்தமாக ஐக்கிய இராச்சியத்திற்குச் செல்லும் மாணவர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படிகள் ஆண்டொன்றுக்கு ஸ்டேர்லிங் பவுண்டுகள் 4,800 இலிருந்து ஸ்டேர்லிங் பவுண்டுகள் 9,000 இற்கும் பட்டப்பின் படிப்பு தொடர்பாக ஆண்டொன்றுக்கு ஸ்டேர்லிங் பவுண்டுகள் 5,400 இலிருந்து ஸ்டேர்லிங் பவுண்டுகள் 10,000 இற்கும் அதிகரிக்கப்பட்டன. இதே தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் ஏனைய நாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படி அதிகரிப்புக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

**5. குடியகல்வு**

1992 மாச்சு 16 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில், குடியகல்வோருக்கு வெளிச் செல்லும் வேளையில், குடும்பமொன்றுக்கு ரூ. 10 இலட்சம் என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டுத் தனிப்பட்ட ஆளொருவருக்கு ரூ. 500,000 மூலதன மாற்றல்கள் அனுமதிக்கப்பட்டன. தனிப்பட்ட பாவனைப் பொருட்களின் ஏற்றுமதிக்கான உச்ச வரம்பு முறையே வயதுவந்தவர்களுக்கும் 12 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்கும் ரூ. 30,000 இற்கும் ரூ. 15,000 இற்கும் அதிகரிக்கப்பட்டது.

**6. தடுத்து வைக்கப்பட்ட நிதியங்கள்**

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த, இலங்கையர்களின் பின்வரும் வகையினரின் வரவு நிலுவைகளில் 1992 யூன் 30 ஆம் நாளில் காணப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட அனைத்து வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட நிதியங்களும் விடுவிக்கப்படலாம் என 1992 யூலை 23 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

(1) இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வெளிநாட்டுப் பிரசா உரிமையினைப் பெற்ற இலங்கையர்கள்.

(2) வெளிநாட்டில் நிரந்தர வதிவுத் தகு நிலையைப் பெற்ற, 1992 யூன் 30 ஆம் நாளில் அவர்களது வதிவற்ற கணக்குகள் 5 வருடங்கள் அல்லது அதற்கு மேல் தடைப்படுத்தப்பட்டிருந்த இலங்கையர்கள்.

**7. பிணைகளில் முதலீடு**

1992 யூன் 29 ஆம் நாளிடப்பட்ட எண் 721/4 கொண்ட அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட சில விலக்குகள், மட்டுப்படுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அத்தகைய கம்பனிகளின் வழங்கப்பட்ட மூலதனத்தின் 100 சதவீதம் வரை பங்குகளை வழங்கவும் பங்குகளை மாற்றல் செய்யவும்

ஒப்புதலளிக்கப்பட்ட நாடுசார் நிதியங்கள், ஒப்புதலளிக்கப்பட்ட பிரதேச நிதியங்கள், இலங்கைக்கு வெளியே ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகள் என்பனவற்றிற்கும் இலங்கையர்களையும் உள்ளடக்கிய வதிவற்ற தனியாட்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த முதலீடுகளுக்கு வசதி செய்து கொடுப்பதற்காக அத்தகைய முதலீட்டாளர்களின் பெயர்களில் ''பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு'' என்ற பெயரில் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. வதிவற்ற வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கும் வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவுகளில் கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கும் அத்தகைய வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் உள்ள நிதியங்களைப் பயன்படுத்தி அத்தகைய கம்பனிகளில் முதலீடுகளை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது.

### 8. கடன்களும் மேலதிகப் பற்றுக்களும்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 30 (7) இன் நோக்கத்திற்காக, பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கின் ஊடாக இந்த வகையான கம்பனிகளின் வழங்கப்பட்ட மூலதனத்தின் 100 சதவீதம் வரையில் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குச் செலாவணிக் கட்டுப்பாட்டு அனுமதி வழங்கப்பட்டதன் விளைவாகக் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் விலை குறிப்பிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் வெளிநாட்டு மூலதன விகிதத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களின் நோக்கில் பங்குகளின் உடைமையினைக் கருத்திற் கொள்ளாது, வதிவற்ற பணிப்பாளர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் விலை குறிப்பிடப்பட்ட பொதுக் கம்பனிகளை மட்டுமே செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன் ஒப்புதல் தேவைப்பாட்டிற்குக் கவனத்தில் எடுத்துக்கொள்வதற்கான திருத்தமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

### 9. சுங்கத்திற்கு வெளிநாட்டு நாணயத்தை வெளிப்படுத்தல்

1992 மாச்சு 19 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் வதிவுடைய மற்றும் வதிவற்ற இரு வகை இலங்கையர்களுக்கும் தாம் வெளிநாட்டில் மேற்கொண்ட பயணங்களின் எண்ணிக்கையினைக் கருத்திற் கொள்ளாது சுங்கத்திற்கு வெளிப்படுத்தாமலேயே ஐ.அ. டொலர்கள் 5,000 அல்லது அதற்குச் சமமான மாற்றக்கூடிய ஏதேனும் நாணயத்தினைத் தம்முடன் கொண்டு வரவும் கொண்டு செல்லவும் அனுமதிக்கப்பட்டது.

## பொதுப் படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் நியதிகளின்படி அரசின் சார்பாக மத்திய வங்கி பொதுப் படுகடனைத் தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது. வங்கியினால் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவிகளாக அரச பிணைகள்/கடன்கள், திறைசேரி உண்டியல்கள், தொகுதிக் கடன்கள், திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் என்பன விளங்கின. வங்கி, அரசின் வெளிநாட்டுப் படுகடனை முகாமைப்படுத்திப் பேணுதலையும் மேற்கொண்டது. மேலும் திணைக்களத்தினால் வெளிநாட்டுப் படுகடன், உள்நாட்டுப் படுகடன் இரண்டினதும் தரவு அடிப்படை பேணப்பட்டதுடன் பொதுப் படுகடன் தொடர்பான கொள்கை உருவாக்கத்திற்கு உதவுவதற்கு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

1992 இறுதியில் வெளிநின்ற அரசின் மொத்தப் படுகடன் ரூ. 4,186,240 இலட்சமாக விளங்கியது. படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூ. 388,490 இலட்சம் 1991 இல் ஏற்பட்ட அதிகரிப்பைவிடக் குறைவானதாகும். இவ்வாண்டில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் பொறுப்புக்கள் ரூ. 2,387,300 இலட்சமாக விளங்கி ரூ. 197,470 இலட்ச அதிகரிப்பை எடுத்துக் காட்டியதுடன் இதில் ரூ. 125,310 இலட்சம் செலாவணி வீதத் தேய்வு காரணமாக ஏற்பட்டதாகும். வெளிநின்ற அரச படுகடனில் வெளிநாட்டுப் படுகடன் 57 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் எஞ்சிய 43 சதவீதம் உள்நாட்டுப் படுகடனைப் பிரதிபலித்தது.

1992 இல் ரூ. 209,200 இலட்சம் பெறுமதி கொண்ட அரச ரூபாக் கடன்கள் மிதக்க விடப்பட்டன. இவ்வாண்டில் ரூபாக் கடன்களின் மொத்த மீள்கொடுப்பனவும், செலுத்தப்பட்ட வட்டியும் முறையே ரூ. 180,940 இலட்சமாகவும் ரூ. 92,730 இலட்சமாகவும் விளங்கின. 1992 இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 737,120 இலட்சமாக விளங்கியதுடன் இதில் ரூ. 45,320 இலட்சம் தேசிய பாதுகாப்பு முறிகளை உள்ளடக்கியதாக இருந்தது. 1992 இல் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கிய உதவுநராக ஊழியர் சேமநிதியம் விளங்கி 1992 இறுதியில் வெளிநின்ற மொத்த ரூபாக் கடன்களில் 74 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. வெளிநின்ற படுகடனில் 19 சதவீதத்தைத் தேசிய சேமிப்பு வங்கி கொண்டிருந்தது.

1992 திசெம்பர் 16 இல் திறைசேரி உண்டியல்கள் மீதான அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூ. 900,000 இலட்சத்திலிருந்து ரூ. 1,250,000 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டது. 1992 இல் திறைசேரி உண்டியல்களைச் சந்தைப்படுத்துவதில் இரண்டு பாரிய கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது காலவரை பின்பற்றி வந்த நடைமுறையிலிருந்து விலகி, 1992 யூலை 24 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் திறைசேரி உண்டியல்களை விற்பதற்குச் சான்றளிக்கப்பட்ட முதன்மை வணிகர்களை வங்கி நியமித்தது. இத் தினத்திலிருந்து சான்றளிக்கப்பட்ட முதன்மை வணிகர்கள் மட்டுமே வாராந்த கேள்விப் பத்திரங்களில் விலை குறிப்பிடுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன், பொதுமக்கள் இவ் வணிகர்களிடமிருந்தே திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யவேண்டியிருக்கும். எனினும் அரசின் செல்வாக்கிற்குட்பட்ட மூலங்களிலிருந்தான போட்டியற்ற விலைக் குறிப்பீடுகளும் உரிய முதிர்ச்சிக் காலப் பகுதிகளுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்தில் ஏற்கப்பட்டன. 1992 இன் இறுதியில் 13 வர்த்தக வங்கிகளை உள்ளடக்கிய 18 முதன்மை வணிகர்களும், 4 பணத் தரகு நிறுவனங்களும், 1 நம்பிக்கைக் கூறின் முகாமைத்துவக் கூட்டு நிலையமும் முதன்மை வணிகர்களாகச் சான்றளிக்கப்பட்டன. மற்றைய கொள்கை மாற்றமாக 3, 6, 12 மாத முதிர்ச்சிகளுடன் 24, 36, 48 மாதங்கள் கொண்ட நீண்ட முதிர்ச்சிகளுக்கான விலைக் குறிப்புக்கான அழைப்பு விளங்கியது. மத்திய வங்கிக்கு 3 மாதத்திற்கும் குறைவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களும் வழங்கப்பட்டன. 1992 இல் திறைசேரி உண்டியல் தொழிற்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்பாக மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் பங்கு 1991 இறுதியின் 48.0 சதவீதத்திலிருந்து 1992 இல் 29.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றமை விளங்கியது. 1992 இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் 1991 இறுதியின் ரூ. 729,680 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 870,960 இலட்சமாக விளங்கின. இவ்வதிகரிப்பானது ரூ. 141,280 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்கள் சார்பாகச் செலுத்தப்பட்ட மொத்த வட்டி ரூ. 113,550 இலட்சமாக விளங்கியது.

1990 இல் ஆரம்பித்த திறைசேரி வைப்புச் சான்றிதழ்களை வங்கி தொடர்ந்தும் வழங்கியது. 6, 12, 24 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட சான்றிதழ்கள் முறையே 17.15 சதவீதம், 18.06 சதவீதம், 19.83 சதவீதம் ஆகிய வீதங்களில் வழங்கப்பட்டன. 1992 இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 1,020 இலட்சமாக விளங்கியது.

1992 இல் நடுத்தர, நீண்டகால வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்த மீள்கொடுப்பனவுகள் ரூ. 143,550 இலட்சமாக விளங்கின. பயன்படுத்தப்பட்ட மொத்த அளவில் 68.3 சதவீதம் செயற்றிட்டக் கடன்களையும் எஞ்சியது செயற்றிட்டமல்லாக் கடன்களையும் சார்ந்ததாகும். 1992 இல் வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவும் ஏனைய கட்டணங்களும் ரூ. 47,250 இலட்சமாக விளங்கின.

## பிரதேச அலுவலகங்கள்—மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை

எதிர்காலக் கடன் பெறுநர்களுக்கான நன்மை பெறுநர் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் என்பனவற்றை நடாத்துதல், அபிவிருத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய மூலவளங்களை இனங்காணல், அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டுள்ள அரச திணைக்களங்களின் நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டுள்ள ஏனைய முகவர் நிலையங்களையும் ஒருங்கிணைத்தல் போன்ற அபிவிருத்தி தொடர்பான வேலைகளில் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை பிரதேச அலுவலகங்களில் அதிகரிப்புக் காணப்பட்டது. எனினும் 1991 திசெம்பரில் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின் கீழான மீள்நிதியிடல் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து 1992 இல் இனங்காணல், மதிப்பிடல், நிதியிடலுக்காகவும் பிற் கண்காணிப்புக்குமாகக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு நிலைத்து நிற்கக்கூடிய செயற்றிட்டங்களை மதிப்பிடுதலும் விதந்துரைத்தலும் என்பன வீழ்ச்சியடைந்தன.

பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட மரபுவழி மத்திய வங்கித் தொழிற்பாடுகளான நாணயத் தொழிற்பாடு, காசோலைத் தீர்ப்பனவு போன்றனவும் தரவுச் சேகரிப்பும் ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் விரிவாக்கப்பட்டன. தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம், நீண்டகால பயிர் அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றின் கீழ் கடன்களைப் பெறுவதற்குத் தேவையான பண்ணை வரவு செலவுத் திட்டங்கள், நிதிப்பாய்ச்சற் கூற்றுக்கள் என்பனவற்றைத் தயாரித்து வழங்குவதன் மூலம் பிரதேச அலுவலகங்கள் எதிர்காலக் கடன்பெறுநர்களுக்குத் தொடர்ந்தும் உதவி வழங்கின. கிராமியப் பிரதேசங்களில் வங்கித்தொழில் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச அலுவலகங்கள் தத்தமது பிரதேசங்களில் கிராமிய மட்டத்திலான கூட்டங்களை (சனகமூவ) தொடர்ந்து நடாத்தின.

எதிர்காலக் கடன்பெறுநர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியமையே 1992 இல் அநுராதபுர பிரதேச அலுவலகத்தின் முக்கிய நடவடிக்கையாக விளங்கியது. ஆய்விற்குரிய ஆண்டில் பிரதேச அலுவலகம் ஏனைய அபிவிருத்தி முகவராண்மைகளுடன் இணைந்து வேளாண்மை கால்நடை அபிவிருத்தி மற்றும் அரிசி பதனிடல் என்பன தொடர்பாக 49 பயிற்சி வகுப்புக்களை நடாத்தியது. இந்த வகுப்புக்களில் கிட்டத்தட்ட 3,000 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். குருநாகல் மற்றும் பொலநறுவை பி.கி.அ. வங்கிகளின் பல கிளைகளில் பரீட்சிப்புக்களையும் பிரதேச அலுவலகம் மேற்கொண்டது. கொரவப்பொத்தானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிந்தெடுக்கப்பட்ட கிராம மொன்றில் மூலவள அளவீடு ஒன்றையும் இவ்வலுவலகம் மேற்கொண்டது.

இவ்வாண்டில் மாத்தறைப் பிரதேச அலுவலகம் இப்பிரதேசத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட சில கிராமங்களில் மூலவள அளவீடு ஒன்றை மேற்கொண்டது. நிதியிடலுக்காகக் கடன் நிறுவனங்களுக்குப் பிரதேச அலுவலகத்தினால் விதந்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

1992 இல் மாத்தளைப் பிரதேச அலுவலகம் ரூ. 328 இலட்சம் பெறுமதி கொண்ட 2,434 செயற்றிட்டங்களை விதந்துரைத்தது. முன்னைய ஆண்டில் விதந்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது 46 சதவீத வீழ்ச்சியினைக் குறித்துக் காட்டியது. கிட்டத்தட்ட 1,500 தொழிலற்ற இளைஞர்களுக்கும் சிறிய அளவு தொழில் முயற்சியாளர்களுக்குமாகப் பிரதேச அலுவலகம் 9 நன்மைகள் பெறுநர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. உற்பத்தியாளர்களுக்குச் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தின் நோக்கில் வேளாண்மையாளர்களுக்குச் சிறப்பாகப் பெரிய வெங்காயத்தைச் சிறு அளவு உற்பத்தி செய்வோருக்கு அவர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான உதவிகளைப் பிரதேச அலுவலகம் வழங்கியது. மேலதிகமாக, மத்திய மாகாணத்திலும் கேகாலை மாவட்டத்திலும் பி.கி.அ. வங்கிக் கிளைகளில் பரீட்சிப்புக்களையும் பிரதேச அலுவலகம் மேற்கொண்டது.

மாத்தறை, அநுராதபுரம் ஆகிய பிரதேச அலுவலகங்களின் நாணயப் பிரிவுகள் தத்தமது பிரதேசங்களில் வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் நாணயப் பரிவர்த்தனை வசதிகளை வழங்குவதைத் தொடர்ந்து மேற்கொண்டன. இப்பிரதேசங்களின் வர்த்தக வங்கிகளுக்கு மேலே குறிப்பிட்ட இரண்டு பிரதேச அலுவலகங்களிலும் உள்ள காப்பறைகளில் காசு வைப்புக்கும் மீளப் பெறலுக்குமான வசதிகளும் வழங்கப்பட்டன. 1992 இல் மாத்தளைப் பிரதேச அலுவலகத்தினால் மாத்தளை கண்டி மாவட்டங்களில் நடாத்தப்பட்ட ''தூய நாணயத் தாள்கள் வார''மானது சுற்றோட்டத்தில் உள்ள நாணயத் தாள்களின் தூய்மையினை உறுதிப்படுத்துவதற்கான தேவையினைப் பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்கான சந்தர்ப்பமொன்றினை வழங்கியது.

முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்வதற்குச் சான்றளிக்கப்பட்ட வணிகர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1992 யூனிலிருந்து பிரதேச அலுவலகங்களில் திறைசேரி உண்டியல்களின் விற்பனை நிறுத்தப்பட்டது. 1992 இன் முதலரைப் பகுதியில் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளைப்

பிரதேச அலுவலகங்களினால் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் தொகை முறையே ரூ.662 இலட்சமாகவும், ரூ.1 இலட்சமாகவும், ரூ. 669 இலட்ச மாகவும் விளங்கியது.

பிரதேச அலுவலகங்களினால் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பிரதேச காசோலைத் தீர்ப்பனவு வசதிகள் 1992 ஆம் ஆண்டில் தொடர்ந்து காணப்பட்டன. 1992 இல் மாத்தறைப் பிரதேச காசோலைத் தீர்வகத்தினால் ரூ. 23,050 இலட்சம் கொண்ட மொத்தம் 174,198 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில், அநுராதபுரம் காசோலைத் தீர்வகம் ரூ. 17,800 இலட்சங் கொண்ட 115,389 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது. மாத்தளைப் பிரதேச அலுவலகம் கண்டி மற்றும் மாத்தளை ஆகிய இடங்களில் உள்ள காசோலைத் தீர்வகங்களினூடாக ரூ. 112,160 இலட்சம் பெறுமதியுடைய மொத்தம் 406,830 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது.

மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட நாடளாவிய தரவுச் சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய பிரதேச அளவீடுகள் என்பனவற்றில் பிரதேச அலுவலகங்கள் தத்தமது பிரதேசங்களில் பங்குபற்றின. 1992 இல் பாடசாலைப் பிள்ளைகளுக்காக வங்கியினால் நடாத்தப்பட்ட பொருளாதார, வங்கித்தொழில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அவை உதவிகளை வழங்கின.

## தகவலும் வெளியீடுகளும்

தகவல்களைச் சேகரிப்பவர்/பரப்புபவர் என்ற அதன் பங்கினை நிறைவேற்றும் விதத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் முயற்சிகளைத் திணைக்களம் தொடர்ந்தும் முன்னின்று பேணி வருகின்றது. இம்முயற்சியில் இது சமூக பொருளாதார அபிவிருத்தியின் அண்மைய போக்கினை முழுமையாக அறிந்து வைத்திருப்பதுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொது மக்கள் என்பவர்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் வெளியிடப்பட்டதும் இதுவரை வெளியிடப்படாததுமான விடயங்களை வழங்கியது. பின்வரும் மத்திய வங்கி வெளியீடுகள் செய்திப் பரப்பலின் முக்கிய மூலமாக அமைந்தன.

(1) 1991 இன் ஆண்டறிக்கை (சிங்களம், தமிழ், ஆங்கிலம்).

(2) 1992 இன் முதல் அரைப்பகுதியின் பொருளாதார அளவீடு (சிங்களம் தமிழ், ஆங்கிலம்).

(3) மாதாந்தச் செய்தித்திரட்டு (சிங்களம், தமிழ், ஆங்கிலம்).

(4) இரு மாதத்திற்கொருமுறையான பொருளாதாரச் செய்தித்திரட்டு (சிங்களம், ஆங்கிலம்).

(5) 1992 ஆம் ஆண்டுக்கான சமூகப் பொருளாதார தரவு மடிப்பு (சிங்களம், தமிழ், ஆங்கிலம்).

(6) பருவகால வெளியீடு எண் 21.

(7) மத்திய வங்கியின் தொழிற்பாடுகளும் செயற்பாடுகளும் (சிங்களம்).

(8) செலாவணித் தளர்த்தல்கள்—இறக்குமதியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்குமான ஓர் வழிகாட்டி.

(9) ஆராய்ச்சிக் கட்டுரை: 1977—87 இல் இலங்கையில் நிதிசார்ந்த சீர்திருத்தம்.

(10) 'சட்டகன'—ஓர் சிறப்பு வெளியீடு.

(11) இலங்கை: ஓர் பொருளாதார நிதியியல் கைத்தொழில் வழிகாட்டி ''சட்டகன'', 'செய்தி அளவீடு', 'வங்கி புவத்' ஆகிய வங்கியின் வெளியீடுகள் தொடர்ந்தும் வெளியிடப்பட்டன.

இவ்வாண்டில் நூலகம் 591 நூல்களையும் சிற்றேடுகளையும் புதிதாகச் சேர்த்ததுடன் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் 223 சஞ்சிகைகளுக்கு சந்தாவையும் செலுத்தியது. வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து நன்கொடை, பரிமாற்றம் ஆகிய வடிவில் நூலகம் 250 நூல்களையும் சிற்றேடுகளையும் பெற்றது. பொருளாதாரம், வங்கித்தொழில், கணக்கியல் சார்ந்த விடயங்களிலான வெளியீடுகளின் சேகரிப்பை அதிகரிப்பதற்கு இதன் முக்கிய தரவையும் செய்தித் தளத்தையும் இயலச் செய்வதற்கு இக் கொள்வனவுகள் உதவின.

திணைக்களம் மக்கள் தொடர்புச் சாதனங்களுடன் அதன் தொடர்பைத் தொடர்ந்தும் பேணியது. இவ்வாண்டில் பல செய்தியாளர் மாநாடுகள் நடாத்தப்பட்டதுடன் முக்கிய கொள்கை மாற்றங்களை அடக்கும் பல பத்திரிகைச் செய்திகளும் வெளியிடப்பட்டன.

மேலும் ரூபவாகினியின் ஊடாக ஒளிபரப்புவதன் மூலம் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு ஒளிப்பதிவுப் பிரிவினால் போதிய விளம்பரம் கொடுக்கப்பட்டது. இப்பிரிவு அதன் தொழிற்பாடுகளை பிரதான நிகழ்ச்சிகளையும் விடயங்களையும் உள்ளடக்கிய சிறிய செய்திப் படங்களை உருவாக்கும் அளவிற்கு விரிவாக்கியதுடன் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் அனுசரணையுடன் கிராமிய அபிவிருத்தித் தொழிற்பாடுகள் மீதான முதலாவது படம் இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டது.

தொடர்புச் சாதனங்களின் கலை வேலைப்பாடும் கட்புலப்பிரிவும் பலதரப்பட்ட திணைக்களங்களுக்காகச் சிற்றேடுகளையும் வெளியீடுகளையும் தொடர்ந்து வரைந்தது. 1993 இல் நடைபெறவிருக்கும் மிகிந்து ஜயந்தி கொண்டாட்டங்களை நினைவு கூருமுகமாக வெளியிடப்படவுள்ள நாணயக் குத்தியின் வடிவமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டமை இப்பிரிவின் தகுதிக்குக் கிடைத்த பெருமையாகும்.

திணைக்களத்தால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் இத்துறையில் க.பொ.த. உயர் வகுப்பு மாணவர்களையும் ஆசிரியர்களையும் இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. வங்கியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு அலுவலர்களால் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டங்களால் மொனறாகலை, அநுராதபுரம், மாத்தளை மாவட்டங்களிலுள்ள ஏறத்தாள 5,000 மாணவர்கள் பயனடைந்தனர்.

வங்கி அச்சகம் இப்பொழுது வங்கி வெளியீடுகளின் ஏறத்தாள 90 சதவீத அச்சிடலைப் பொறுப்பேற்றுள்ளது. அச்சகத்தால் பொறுப்பேற்கப்பட்ட வேலைகளைக் கருத்தில் எடுக்கும்போது ஆய்விற்குரிய ஆண்டில் அச்சிடல் செலவுகள் மூலமாக ரூ. 20 இலட்சம் அளவில் சேமிக்கப்பட்டது. அச்சகம் பொறியினைச் சேர்த்ததன் மூலம் அதன் இயலளவை விரிவாக்கியது.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

இவ்வாண்டில் வங்கி அலுவலர்கள் பல ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களைப் பூர்த்தி செய்தனர். இவை வங்கியின் நடைமுறையிலுள்ள ஆராய்ச்சிப் பயிற்சிச் செயற்றிட்டங்களின் கீழ் சில அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகளையும் மூத்த அலுவலர்களினால் அவர்களது சொந்த ஊக்கத்தால் கமற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளையும் மற்றைய அமைப்புக்களிடமிருந்து அவர்ளுேக்கு எழுந்த கேள்வியை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும் உள்ளடக்கியிருந்தன. இவற்றில் சிலவற்றை 1993 இல் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அளவீடுகளும், தரவுச் சேகரிப்புகளும்

### வறியோர் மீதான சிறப்பு முக்கியத்துவத்துடன் கொடுகடன் தேவைகளுக்கான அளவீடு-1992

1992 இல் வங்கி வறியோர் மீதான சிறப்பு முக்கியத்துவத்துடன் நாட்டின் கொடுகடன் தேவைகளை அறியும் பொருட்டு ஒரு பரந்த அளவிலான வீட்டுடைமையாளர் அளவீட்டை ஆரம்பித்தது. இவ் அளவீட்டின் நோக்கங்களாவன:—

(அ) கிராமியத் துறையில் நிறுவன ரீதியான கொடுகடன் எந்த அளவிற்குப் பரந்திருக்கிறது என்பதையும் நகர, கிராமிய, பெருந்தோட்டத்துறைகள் என்பவற்றிலுள்ள குறைந்த வருமானக் குழுக்களின் கொடுகடன் தேவைகளை எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளது என்பதையும் இனங் காணல்.

(ஆ) கடன் பெறுநர், கடன் பெறாதோர் ஆகிய இரு பகுதியினரதும் கொடுகடன் தேவைகளை மதிப்பிடுதல்.

(இ) கடன் பெறுநர்களுக்குக் கிடைக்கக்கூடிய வங்கிக் கொடுகடனின் போதுமான தன்மை, கொடுகடனுக்கான குறைநிரப்பி மூலங்கள் என்பனவற்றை மதிப்பிடல்.

(ஈ) நிறுவன ரிதியிலான மூலங்களிலிருந்து கடன் பெற்ற பணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் வெற்றியையோ தோல்வியையோ மதிப்பிடுதல்.

(உ) முறைசாராத துறையிலிருந்து கொடுகடனை நாடியதற்கான காரணங்களை விசாரித்தல்.

இந் நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகள், கொடுகடனின் மூலங்கள், கொடுகடன் பயன்பாடு, தொழில் முயற்சி, கடன் மீள் கொடுப்பனவு என்பன தொடர்பான தகவல்கள் மாதிரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வீட்டுடைமையாளர்களிடமிருந்து நாடப்பட்டன. கொடுகடன் தேவைகளின் பரந்தளவிலான பகுப்பிற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு வீட்டுடைமையாளர்களிடமிருந்து சமுதாய நிலைப் பண்புகள், வீட்டு

நிலைமைகள், காணிப் பயன்பாடு, தொழிற்படையின் தொழில் நிலை, மனிதவலுப் பயன்பாடு, வீட்டுடைமையாளரின் வருமானம், சேமிப்புக்களும் கடன்களும் போன்ற சமூக பொருளாதார நிலைமைகள் மீதான தகவலும் பெறப்பட்டது.

இவ் அளவீட்டில், நகரத்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 43 நகர வட்டாரங்களிலிருந்தும், கிராமியத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 216 கிராமங்களிலிருந்தும், பெருந்தோட்டத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 10 பெருந்தோட்டங்களிலிருந்தும் 32,000 வீட்டுடைமையாளர்கள் மாதிரியாகக் கணக்கிடப்படுவர். 1992 மேயில் ஆரம்பமான தரவுச் சேகரிப்பு பருவகால மாறுபாடுகளை உள்ளடக்கும் பொருட்டு ஒரு வருட காலப் பகுதிக்குத் தொடரும். தரவுச் சேகரிப்பு, களமேற்பார்வை, தரவு செய்முறைப்படுத்தல் என்பன பயிற்சி பெற்ற மத்திய வங்கி அலுவலர்களால் முற்றாகப் பொறுப்பேற்கப்பட்டன.

**நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை**

1978 இல் ஆரம்பிக்கப்பட்ட நாடளாவிய தரவு சேகரிப்புமுறை 1992 இலும் தொடர்ந்து தொழிற்பட்டது. நாடு முழுவதும் பரந்துள்ள தெரிந்தெடுக்கப் பட்ட 100 நிலையங்களிலிருந்து நுகர்வோர் பொருட்களின் சில்லறை விலைகள், முக்கிய வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள், நன்கமைக்கப் படாத தேயிலை, இறப்பர், தெங்குத் துறையினதும் கட்டடத்துறையினதும் கூலி வீதங்கள், முக்கிய வேளாண்மை உள்ளீடுகளின் விலைகள் என்பன மீதான தரவுகள் ஒழுங்கான அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழான தகவல்கள் சில தேர்ந்தெடுக்கப்பட்ட அரச பாடசாலை ஆசிரியர்களால் சேகரிக்கப் படுகின்றன.

**தேசிய கணக்குகள்**

1992 இல் வங்கி உற்பத்திப் பக்கம், செலவுப் பக்கம் ஆகிய இரண்டிலு மிருந்து தேசிய கணக்குகளின் முறையினைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது. இரண்டாந்தர மூலங்களிலிருந்தான தரவுச் சேகரிப்பைவிட, நாட்டின் தேசிய கணக்குகள் மதிப்பீட்டினை மேம்படுத்துவதற்கு வங்கி இயலுமானவரையில், காலாண்டு அடிப்படையில் முதலாந்தர மூலங்களிலிருந்தான தரவு சேகரிப்பிலும் ஈடுபட்டது.

**இறக்குமதிகளைக் கண்காணித்தல்**

மொத்த இறக்குமதிகளும் அதன் உள்ளடக்கமும் பற்றி முன்கூட்டியே குறிகாட்டியை வழங்கும் நோக்குடன் நாணயக் கடிதங்கள், நாணயக் கடிதங் களுக்கு எதிராகப் பெறப்பட்ட உண்டியல்கள் என்பன தொடர்பாக வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளினூடாக வங்கி இறக்குமதியைத் தொடர்ந்து கண்காணித்து வந்தது.

**தொழில்நிலைப் புள்ளிவிபரங்கள்**

அரச துறையில் தொழில் நிலை மீதான வருடாந்த அளவீடு 1992 இலும் தொடர்ந்தது. இவ் அளவீட்டின் நோக்கம் அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள்,

மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுறவுத்துறை என்பவற்றின் தொழில்நிலையின் போக்குகளை அளவிடுவதாகும். இதேவேளை முறைசார் தனியார் துறையின் தொழில்நிலையின் போக்குகளை அளவிடுவதற்கு ஊழியர் சேமநிதியம், ஏனைய சேம நிதியங்கள் மீதான தரவு போன்ற நிருவாகப் பதிவேடுகளில் கிடைக்கத்தக்க தரவுகள் பயன்படுத்தப்பட்டன.

## தரவு செய்முறைப்படுத்தல்

வங்கி தனது சொந்த முதன்மைக் கணனியைப் பயன்படுத்திப் பெரும் தொகையான தரவினைத் தொடர்ந்தும் செய்முறைப்படுத்தியது. இத்தரவில் பெரும்பாலானவை ஊழியர் சேமநிதியம் மீதானதாகும். வங்கியால் நடாத்தப் பட்ட ''வறியோரை முக்கியமாகக் கொண்ட கொடுகடன் தேவைகள் பற்றிய அளவீடு'' இல் சேகரிக்கப்பட்ட தரவை செய்முறைப்படுத்தியமையே 1992 இல் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய வேலையாகும். 1992 இல் மத்திய செய்முறைப்படுத் தல் அலகு நேரம், முதன்மைக் கணனியின் பட்டியல்படுத்தும் நேரம் ஆகிய இரண்டையும் அடக்கிய பயன்படுத்தப்பட்ட கணனி மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கை 3,618 மணித்தியாலங்களாக விளங்கியதுடன், இது முன்னைய ஆண்டின் மட்டமான 3,577 மணித்தியாலங்களை விடச் சிறிதளவு கூடியதாகும்.

## பயிற்சி

கல்வி சார்ந்த, கல்வி சாராத துறைகளில் அலுவலர்களைப் பயிற்றுவித்தல் 1992 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. பொருளியலிலும் அது தொடர்பான துறைகளிலும் பட்டப்பின்படிப்புக்கள் தொடர்பான கல்வி சார்ந்த பயிற்சி வெளிநாட்டிலுள்ள தகுதி வாய்ந்த பல்கலைக்கழகங்களில் ஒழுங்கு செய்யப்பட்டது. இவை முதுமாணி, முனைவர் பட்டங்களுக்கான நெறிகளை உள்ளடக்கியிருந்தன. பட்டப்பின் படிப்புகளுக்காக 1992–93 இல் 18 அலுவலர்களும், 1993–94 இல் 5 அலுவலர்களும் பெயர் குறிப்பிடப்பட்டனர். இது 1992 ஏப்பிரலில் 8 அலு வலர்களையும், 1992 யூனில் 10 அலுவலர்களையும், 1992 நவெம்பரில் 5 அலு வலர்களையும் கொண்டிருந்தது. இவ் எண்ணிக்கையில் 1992 திசெம்பர் வரை 15 அலுவலர்கள் பட்டப்பின்படிப்புகளுக்காக வெளிநாடு சென்றனர். ஓர் அலுவலர் முனைவர் பட்டத்திற்காகச் சென்றார்.

கல்வி சாராத் துறைகளிலான பயிற்சியானது வங்கிக்கு முக்கியத்துவமுடைய குறிப்பிடப்பட்ட துறைகள் தொடர்பான உள்நாட்டு, வெளிநாட்டு குறுங்காலப் பயிற்சி நெறிகள், ஆய்வரங்குகள், வேலைத் தளங்கள், கல்விச் சுற்றுலாக்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. 1992 இல் மொத்தமாக 68 அலுவலர்கள் குறுங்காலப் பயிற்சிக்காக வெளிநாடு சென்றனர். 143 அலுவலர்கள் இலங்கையி லுள்ள பல்வேறு நிறுவனங்களில் உள்ள உள்நாட்டுப் பயிற்சி நெறிகள், ஆய் வரங்குகள் ஆகியவற்றில் பங்குபற்றிய வேளையில் 201 அலுவலர்கள் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட நெறிகளில் பங்குபற்றினர்.

வங்கி, பட்டப்பின் பயிற்சிக்காக வெளிநாடு செல்லத் திட்டமிட்டுள்ள அலுவலர்களுக்குப் பொருளியலிலும் கணிதவியலிலும் வகுப்புக்களை நடாத்தியது. பட்டப்பின் படிப்பை நாடுபவர்களுக்காகப் பிரித்தானியக் கழகத்தின் மொழி நிலையத்தில் ஆங்கிலமொழி நெறியை நடாத்துவதற்கும் அதனுடன் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

திணைக்களம் அதன் வழமையான கடமைகளான தொழில்நுட்ப, உயர் பதவியல்லா வகுப்புத் தரங்களுக்கான பதவியேற்றப் பரீட்சைகளையும் உயர் பதவி வகுப்புக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சையையும் பட்டப்பின் படிப்பு புலமைப் பரிசில்களுக்கான தகுதிகாண் பரீட்சையையும் நடாத்தியது.

## முகாமைக் கணக்காய்வு

1992 ஆம் ஆண்டில் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் அதன் வேலை நிகழ்ச்சித் திட்டத்தின்படி வங்கியின் பல்வேறு திணைக்களங்களின் கணக்காய்வை மேற்கொண்டது. இக்காலப் பகுதியில் திணைக்களம் மாத்தறை பி.கி.அ. வங்கித் தொழிற்பாடுகளின் பரந்தளவிலான கணக்காய்வையும் அநுராத புரம் பி.கி.அ. வங்கியின் ஓர் விசாரணைக் கணக்காய்வையும் மேற்கொண்டது.

கணக்காய்வின்போது வங்கியின் விதிகளிலும் ஒழுங்கு முறைகளிலும் கூறப் பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்கி ஒழுகுவது தொடர்பான குறைபாடுகளை வெளிப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

கணக்காய்வுத் தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, ஆய்விற்குரிய காலத்தில் இத் திணைக்களத்தின் முகாமைப் பணிகள் பிரிவு வங்கியின் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்மீது பல முக்கிய ஆய்வுகளையும் அளவீடுகளையும் மேற் கொண்டது. இவ்வாய்வுகளில் அடங்கியவை: வங்கியில் புகைப்படப் பிரதிப் பொறிகளின் பயன்பாடு, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் வேலை ஆய்வு, சிற்றூழியர்களின் சீருடைகள் மீதான அளவீடு, வங்கியில் தனியாள் கணனியின் பாவனை, மின், நீர், எரிபொருள், தொலைபேசி ஆகிய கட்டணங் களின் மாதாந்தச் செலவுக் கணக்கு மீதான ஆய்வு, வங்கிக் கட்டடங்களின் தீ விபத்துக்கள் மற்றும் சுத்தம் மீதான அறிக்கை, சிற்றூழியர்கள், உயர் பதவி வகுப்பல்லாதோர், உயர் பதவி வகுப்பு என்போருக்கான நடைமுறையில் இருக்கும் குறிப்பிட்ட எண் தொகையின் மீளாய்வு, வங்கிக்குச் சொந்தமான உந்து ஊர்திகளின் அளவீடு.

## பணிமனை

வழமையான பேணல் வேலைகள் மற்றும் வங்கிப் பணிமனையினை ஒழுங் காக வைத்திருத்தல் என்பனவற்றுடன் பின்வரும் கட்டுமான செயற்றிட்டங்களும் இவ்வாண்டில் கையாளப்பட்டன.

### 1. நுவரெலியா

(அ) 1991 நவெம்பரில் தொடங்கப்பட்ட இரட்டைப் பங்களாவிற்கான கட்டுமான வேலை 1992 ஏப்பிறலில் முடிவடைந்தது. இந்த பங்களா வங்கி அலுவலர்களுடைய விடுமுறைக்கால இல்லமாகப் பாவிக்கப்படும்.

(ஆ) 1992 இல் கட்டுமான வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் 15 பிரிவுகளைக் கொண்ட விடுமுறைக்கால இல்லம் 1993 ஏப்பிறலில் பாவனைக்கு ஆயத்தமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**2. கண்டி**

கண்டியில் அமைக்கப்படும் சுற்று வட்டாரப் பங்களாவின் கட்டுமான வேலைகள் சென்ற ஆண்டு திருப்திகரமான முன்னேற்றத்தைக் கொண்டிருந்தன. 1992 ஆம் ஆண்டு முடிவில் கட்டுமான வேலைகளில் 90 சதவீதம் முடிவடைந்ததுடன் மிகுதி வேலை 1993 ஏப்பிறல் முடிவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**3. இராஜகிரிய**

1991 இல் தொடங்கப்பட்ட தொழிற்கூடத்தின் கட்டுமான வேலை 1992 மாச்சில் முடிவடைந்தது. தொழிற்கூடத்திற்கு அருகாமையிலமைந்துள்ள புதிய இரண்டு மாடிக் கட்டிடத்தின் கட்டுமானம் நிதியமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் பிற்போடப்பட்டது.

**4. கதிர்காமம்**

1992 இன் முதற் காலாண்டுப் பகுதியில் மத்திய வங்கி ஊழியர்களுக்கும் மொனராகலை மாவட்டத்தின் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளை அலுவலகத்துக்குமான சுற்று வட்டார பங்களாவும் அதனோடு சேர்ந்த யாத்திரிகர் விடுதிக்குமான கட்டுமான வேலைகள் தொடங்கின. 1992 இன் முடிவில் 3 படுக்கை அறைகளைக் கொண்ட இந்தச் சுற்றுவட்டார பங்களாவின் கட்டுமான வேலைகளில் 90 சதவீதம் முடிவடைந்தது. ஒவ்வொரு பிரிவுக்கும் இரண்டு இரட்டை அறைகளைக் கொண்ட 3 அலகுகளை உள்ளடக்கிய யாத்திரிகர்கள் விடுதி 1993 இன் முதலரைப் பகுதி முடிவடையும் முன்னர் முற்றுப்பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதே கட்டிடத்தில் தற்பொழுது கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் மொனராகலை மாவட்டப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் 1,900 சதுர அடி தளப்பரப்பைக் கொண்ட கிளை அலுவலகம் 1993 இல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**5. ஊர்திகளுககான பல மாடித் தரிப்பிடம்**

1990 இல் தொடங்கப்பட்ட ஊர்திகளுக்கான பல மாடித் தரிப்பிடத்தின் கட்டுமான வேலை 1992 மாச்சில் முடிவடைந்தது. இலங்கையில் இவ்வகையில் முதலாவதான இவ்வூர்திகள் தரிப்பிடம் வங்கியின் தொழில்நுட்ப அலுவலர்களினால் வடிவமைக்கப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்ட வெளிக் கூலியாட்களுடன் ஏறக்குறைய ரூ. 100 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

## நலம்

வங்கி அதன் ஊழியர்களுக்குப் பின்வரும் நல வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

1. வீடமைப்புக் கடன் திட்டம்.
2. அலுவலர் நன்மைத் திட்டம்.
3. ஊர்திகள் கடன் திட்டம்.
4. மருத்துவ நன்மைத் திட்டம்.
5. சேமநிதியக் கடன் திட்டம்.

வீடமைப்பு, ஊர்திகள் கடன் திட்டங்களின் கீழான கடன் உரித்துக்களும் மருத்துவ நன்மைத் திட்டத்தின் கீழான நன்மைகளும் 1992 இல் அதிகரிக்கப் பட்டன.

மத்திய வங்கிச் சிற்றுண்டிச்சாலை ஊழியர்களுக்குக் காலை உணவையும், மதிய உணவையும் தொடர்ந்தும் கொள்விலையில் வழங்கியது. வங்கியின் எல்லாத் திணைக்களங்களிலுள்ள எல்லா அலுவலர்களுக்கும் காலையிலும் மாலையிலும் தேநீர் பரிமாறப்பட்டது. அலுவலக வைபவங்களில் உணவு வழங்கும் ஏற்பாடு களையும் சிற்றுண்டிச்சாலை செய்தது.

வங்கியின் மருத்துவ சிகிச்சைப் பிரிவு அனைத்து வேலை நாட்களிலும் அலு வலக நேரத்தில் முழுக் கவனிப்புடனான வைத்தியரைக் கொண்டிருந்தது. இத்துடன் ஒரு மருந்தகமும், நோய்க்கூற்று ஆய்வு கூடமும் மருத்துவ சிகிச்சைப் பிரிவுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

## ஆளணி

ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணாதிலக 1992 யூன் 30 வரைக்கும் பின்வரும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்:—

(1) மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்களது 27 வது மாநாடு.

(2) நேபாளத்தின் காத்மண்டுவில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் 20 ஆவது சபைக் கூட்டம்.

(3) ஐக்கிய இராச்சியத்தின் இலண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களது மாநாடும், சுவிற்சலாந்திலுள்ள பேஸ்லியில் நடைபெற்ற பன்னாட்டுத் தீர்ப்பனவு வங்கியின் ஆண்டுக் கூட்டமும்.

1992  யூலை 1 இலிருந்து முனைவர் எச். என். எஸ். கருணாதிலகவின் இடத்துக்கு வந்த திரு எச் பீ. திசநாயக்க யப்பானிலுள்ள டோக்கியோவில் நடைபெற்ற மத்திய வங்கித் தொழில் நெறியின் 19 ஆவது சியென்சா ஆளுநர்கள் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் இந்தோனேசியா வங்கியின் ஆளு நரைச் சந்திப்பதற்கு ஜகர்த்தாவிற்கும் சென்றார்.

துணை ஆளுநர் முனைவர் எஸ். ரீ. ஜீ. பர்னாந்து மூத்த துணை ஆளு நராகப் பதவியமர்த்தப்பட்டதுடன் ஆளுநர் இலங்கையில் இல்லாதவிடத்து வங்கி யின் தலைமை நிறைவேற்று அலுவலராகவும் நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

## நியமனங்கள்

நாணய பதில் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. டபிள்யூ. ஏ.விஜேவர்த்தன 1991 ஒற்றோபர் 29 இலிருந்து நாணயப் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

முகாமைக் கணக்காய்வுத் துணைப் பணிப்பாளர் திரு. எஸ். ரூபசிங்க 1992 பெப்புருவரி 21 இலிருந்து பதில் மேலதிக முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொதுப்படுகடன் துணைக் கண்காணிப்பாளர் திரு. டபிள்யூ. எஸ். எஸ். பர்னாந்து 1992 பெப்புருவரி 21 இலிருந்து பொதுப்படுகடன் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

கிராமியக் கொடுகடன் துணைப் பணிப்பாளர் திருமதி எம். என். ஆர். குறே 1992 பெப்புருவரி 21 இலிருந்து வங்கித்தொழில் அபிவிருத்தியின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நாணயத் துணைக் கண்காணிப்பாளர் திரு. சி. கே. பரணவிதான 1992 பெப்புருவரி 21 இலிருந்து நாணய பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பணிமனைப் பணிப்பாளர் திரு. ஜி. ஏ. பெரேரா 1992 மே 13 இலிருந்து பாதுகாப்புப் பணிகளின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

முனைவர் எம். யு. ஏ. தென்னக்கோன் 1992 யூலை 3 இலிருந்து கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஜே. ஈ. டீ. கருணாரத்ன 1992 யூலை 3 இலிருந்து வங்கி யல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வையின் பதில் மேலதிகப் பணிப் பாளராக நியமிக்கப்பட்டார்.

ஆளுநரின் ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த முனைவர் ஏ. சி. றன்தெனி 1992 யூலை 17 இலிருந்து பொதுப்படுகடனின் கண்காணிப்பாளராகவும் பொதுப் படுகடனின் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டார்.

ஆலோசகர் திரு. ஜி. எம். பி. டீ. த சில்வா 1992 ஓகத்து 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

முனைவர் எல். ஈ. என். பர்னாந்து 1992 ஓகத்து 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. பி. எம். நாகாவத்த 1992 ஓகத்து 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பதில் மேலதிகச் செயலாளர் திரு. எச். ஈ. ஜி. எட்டியாராச்சி 1992 ஓகத்து 20 இலிருந்து நிறுவனப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

முகாமைக் கணக்காய்வின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. எஸ். ரூபசிங்க 1992 ஓகத்து 20 இலிருந்து நிறுவனப் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. ரி. எஸ். என். பர்னாந்து 1992 ஒற்றோபர் 19 இலிருந்து வங்கித் தொழில் அபிவிருத்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

வங்கித் தொழில் அபிவிருத்திப் பணிப்பாளர் திரு. சி. ஈ. ஜயசூரிய 1992 ஒற்றோபர் 29 இலிருந்து செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பயிற்சிப் பணிப்பாளர் திரு. ரி. ஜி. சவுந்தரநாயகம் 1992 திசெம்பர் 8 இலிருந்து அபிவிருத்தி நிதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நிறுவன பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. எஸ். ரூபசிங்க 1992 திசெம்பர் 8 இலிருந்து பணிமனைப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொதுப்படுகடன் பதில் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. டபிள்யூ. எஸ். எல். பர்னாந்து 1992 திசெம்பர் 8 இலிருந்து கிராமியக் கொடுகடன் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நலன்புரி மேலதிகப் பணிப்பாளர் திரு. ரி. எச். டீ. பீரிஸ் 1992 திசெம்பர் 8 இலிருந்து நலன்புரிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நலன்புரிப் பணிப்பாளர் திரு. எஸ். பட்டிவிதான 1992 திசெம்பர் 8 இலிருந்து பயிற்சிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பணிமனைப் பணிப்பாளரும் பாதுகாப்புப் பணிகள் பதில் பணிப்பாளருமான திரு. ஜி. ஏ. பெரேரா 1992 திசெம்பர் 8 இலிருந்து பாதுகாப்புப் பணிகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**விடுவிப்பிலுள்ள அலுவலர்கள் (1992 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையில் உள்ள அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிற்கும் பன்னாட்டு அமைப்புக்களுடன் செயற்படுவதற்காகவும் விடுவிக்கப்பட்டனர்.

திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன செயலாளராகக் கடமையாற்றுவதற்காகக் கைத்தொழில் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சிற்கு.

முனைவர் எல். ஈ. என். பர்னாந்து வங்காளதேசம், பூட்டான், இந்தியா இலங்கை என்பனவற்றிற்கான மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காகப் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

திரு. என். ஏ. தர்மபந்து ஆளுநரின் ஆலோசகராகக் கடமையாற்றுவதற்காக மியன்மா மத்திய வங்கிக்கும், முனைவர் திருமதி ஆர். ஜயமகா செயலாளராகக் கடமையாற்றுவதற்காக நிதி மற்றும் வங்கித் தொழில் மீதான சனாதிபதி ஆணைக்குழுவிற்கும்.

திருவாளர்கள் சி. லியனகே, டபிள்யூ. ஏ. டீ. ஈ. வீரசிங்க, என். எம். தயாரத்ன, எல். ஏ. மகேந்திரன், கே. எம். அபயக்கோன், ரி. டபிள்யூ. ஆரியரட்ன, செல்வி கே. சரவணமுத்து நிதி அமைச்சிற்கு.

திரு. எஸ். எம். ஏ. சிறிவர்த்தன செயற்றிட்ட மாவட்ட இணைப்பதிகாரியாகக் கடமையாற்றுவதற்காகப் புத்தளம் மாவட்டத்திலுள்ள சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்திற்கு.

திரு. டீ. பீ. ஜயசூரியா பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கு.

**ஓய்வு பெறல்/பதவி விலகல்**

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. எஸ். டபிள்யூ. பி. அமரசூரியா 1992 யூலை 31 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

செயலாளர் திரு. டபிள்யூ. ஜயசேன 1992 ஒற்றோபர் 29 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.